விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 209 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 31 ஞாயிற்றுக்கிழமை (16.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ஜனாதிபதி அனைவரையும் இன, மத ரீதியாக ஒன்றிணைத்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துகிறார்

### யாழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார



(யாழ்ப்பாணம்)

முன்னைய அரசியல்வாதிகள் எம்மை பிளவுபட வைத்த போதிலும், தற்போதைய ஜனாதிபதி அனைவரையும் இன, மத ரீதியாக ஒன்றிணைத்து நல்லிணக்கத்தை ஏற்படுத்தி வருவதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

தனிச் சிங்கள சட்டம் ▷19

## பதவியேற்பை நினைவுகூராதீர்

### ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

தாம் ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ள நிலையில், அது தொடர்பில் பதவியேற்பை நினைவுகூரும் நிகழ்வை ஏற்பாடு செய்ய வேண்டாம் என அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில்

▷19

# குருந்தூர்மலை விவகாரம் இன, மதவாதத்தின் உச்சம்

## தமிழர்களின் வழிபாட்டு உரிமை பறிக்கப்பட்டுள்ளது தமிழ்ப் பிரதிநிதிகள் கடும் கண்டனம்

(முல்லைத்தீவு)

குருந்தூர்மலை விவகாரம் இன, மதவாதத்தின் உச்சம் என குற்றம்சாட்டியுள்ள தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் தமிழ் மக்களின் மத வழிபாட்டு உரிமை பறிக்கப்பட்டுள்ளதாகவும் சாடியுள்ளனர்.

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தமிழ் மக்கள் பொங்கல் பொங்குவதற்கு நீதிமன்றம் அனுமதியளித்திருந்தது.

அதன் பிரகாரம் அங்கு சென்ற தமிழ் மக்கள் பொங்கல் பொங்குவதற்கு முற்பட்ட வேளையில், அங்கு வருகை தந்திருந்த பௌத்த பிக்குகளும் அவர்களுடன் வருகை தந்திருந்தவர்களும் அதற்கு இடையூறு விளைவித்ததுடன் பொலிஸாரும் அவர்களுக்கு ஆதரவாக செயற்பட்டு, பொங்கல் பொங்குவதற்குத் தடை யேற்படுத்தினர்.

இச்சம்பவம் இடம்பெற்ற வேளையில் அப்பகுதியில் இருந்தவரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். கஜேந்திரன், "குருந்தூர்மலையில் பொங்கல் பொங்கி வழிபாட்டில் ஈடுபடுவதற்கு நீதிமன்றம் அனுமதியளித்திருந்த போதி

▷19

## கோழி இறைச்சி விலைக் குறைப்பு

(கொழும்பு)

ஒரு கிலோ கோழியிறைச்சியின் விலை 200 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை கோழி இறைச்சி வர்த்தகர்

▷19

## பளையில் விபத்து; குடும்பஸ்தர் மரணம்



(பளை)

பளையில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி பளை இத்தாவில்பகுதியில் நேற்று காலை இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் முல்லைத்தீவு

▷19

## தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையுடன் 13ஐ அமுலாக்க இந்தியாவுக்கு எடுத்துக்கூற வேண்டும்

### யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பத்மநாதன்



(யாழ்ப்பாணம்)

தமிழ்க் கட்சிகள் அனைவரும் ஒன்றுபட்டு 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு இந்தியாவிடம் கோரிக்கை

▷19

## தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின்

### க்ளோக்கல் பெயார் நடமாடும் சேவை



▷06

## வடக்கு ரயில் சேவை மீண்டும் தடைப்படலாம்?


(யாழ்ப்பாணம்)

வடக்குக்கான ரயில் சேவை மீண்டும் தடைப்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

மாஹோ சந்திக்கும் அநுராதபுரத்துக்கும் இடையிலான பாதையை புனரமைக்கும் பணியை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த புனரமைப்புப் பணிகளை ஆரம்பிக்க அதிகாரிகள் தீர்மானித்தால், வடக்கு மார்க்கத்திற்கான ரயில் சேவைகள் தொடர்ந்தும் தடைப்படலாம். (ம-7)

## கீரிமலை நகுலேஸ்வரக் குருக்கள் இறைவனடி சேர்ந்தார்



(யாழ்ப்பாணம்)


கீரிமலை நகுலேஸ்வர ஆலய ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ. நகுலேஸ்வரக் குருக்கள் நேற்றிரவு தனது 98ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

▷19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவலைகளில்

## 14 ஆண்டுகள்...



மலர்வு
18.07.1930

உதிர்வு
22.06.2009

# அமரர் சுப்பிரமணியம் நாகராஜா

## (Retired MSO Jaffna Post Office)

திதி :- சதுர்த்தசி 16.07.2023 ஞாயிற்றுக்கிழமை

அப்பா உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காக நம் குடும்பத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து அனைவரது வாழ்வினையும் பிரகாசிக்கச்செய்த அமரர் **சுப்பிரமணியம்** நாகராஜா அவர்களது ஆத்ம சாந்திக்காக 16.07.2023 ஞாயிற்றுக்கிழமை இன்று கைதடி வீரகத்திப் பிள்ளையார் சிவன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்று சுன்னாகம் வாழ்வக விழிப்புல வலுவிழந்தோர் இல்லம், வவுனியா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக முதியோர் இல்லம், புதுக்குடியிருப்பு இனிய வாழ்வு இல்லம் ஆகிய பராமரிப்பு நிலையங்களிலுள்ள சிறுவர்கள், முதியோர்களுக்கு விசேட மதிய உணவும் வழங்கப்படும்.

தகவல்:- குடும்பத்தினர் சார்பாக
மகன் நாகராஜா விஜயகுமார் (சங்கர்) சுவிஸ்.

(16299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்டெம்பர் முதல்
# வாகனம் தவிர்ந்த ஏனையவற்றின்
# இறக்குமதித் தடை நீக்கம்

(கொழும்பு)

**எதிர்வரும் செப்டெம்பர் முதல் வாரத்தில் இலங்கைக்கு இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ள பொருட்களில் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பொருட்களையும் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்க அரசு முடிவு செய்துள்ளது.**

ஜனாதிபதியின் பணிப்பாளர் பிரதானி சாகல ரத்நாயக்க, நிதியமைச்சின் அதிகாரிகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் அரசாங்கம் இந்த தீர்மானத்தை எட்டியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் வாரந்தோறும் மீளாய்வு நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 286 பொருட்களுக்கான இறக்குமதித் தடை நீக்கப்பட்டுள்ளதுடன், வாகனங்கள் உட்பட மேலும் 930 பொருட்களுக்கான இறக்குமதித் தடைகள் முன்பு போலவே அமுலில் உள்ளன.

இதையடுத்து தடை செய்யப்பட்ட பொருட்களை இரண்டு கட்டங்களாக செப்டெம்பர் முதல் வாரத்திற்குள் அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்பிறகு வாகன இறக்குமதி மீதான தடையை நீக்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதுடன், அதை ஒரு மூலோபாய திட்டத்தின்படி செய்வது குறித்தும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

முதலாவதாக, மின்சார வாகனங்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்குவதில் அரசாங்கத்தின் கவனம் குவிந்துள்ளது. (4)

# விலை குறைப்பை அமுல்படுத்தாத வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

## நுகர்வோர் விவகார அதிகார சபை

(கொழும்பு)

பொருட்களின் விலை குறைப்பின் பயனை மக்களுக்கு வழங்காத வர்த்தக நிலையங்களை அடையாளம் காண்பதற்கான சோதனை நடவடிக்கைகள் தொடர்வதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அந்த சபையின் சுற்றிவளைப்பு மற்றும் சோதனை பிரிவின் பணிப்பாளர் ரசல் சொய்சா இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ள நிலையில் அதன் பயன் நுகர்வோருக்கு வழங்கப்பட வேண்டும்.

எனினும், பிரதேச ரீதியாக மக்களுக்கு குறைந்த விலையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதில்லை. இதற்கு விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமையே பிரதான காரணமாகும்.

விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமையால், மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன், அதிக விலைக்கு பொருட்களை கொள்வனவு செய்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# இம்மாத இறுதிப் பகுதியில்
# அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகள்
## செஹான் சேமசிங்க

(கொழும்பு)

நலன்புரித் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளவர்களுக்கான நலன்புரி கொடுப்பனவு இம்மாதத்தின் இறுதிப் பகுதியில் இருந்து வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகள் பிரதேச செயலக பிரிவுகள் ஊடாக தற்போது முழுமையாக பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பரிசீலனைகளை தொடர்ந்து பெயர் பட்டியலில் மாற்றம் ஏற்படும் போது புதிதாக உள்வாங்கப்படும் பயனாளர்களுக்கான ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாத தவணை கொடுப்பனவு ஒரே நேரத்தில் வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அரச நலன்புரித் திட்ட கொள்கைக்கு அமைய கிடைக்கப்பெற்ற 33 இலட்ச விண்ணப்பதாரிகளில் 70 சதவீத சமுர்த்தி பயனாளர் குடும்பங்கள் அஸ்வெசும நலன்புரித் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் ஊடாக 22 இலட்சம் குடும்பங்களுக்கு குறுகிய மற்றும் நீண்டகால திட்டத்துக்கு அமைய நிவாரணத் தொகை வழங்கப்படவுள்ளது.

இந்தத் தொகை 16.8 இலட்சம் சமுர்த்தி பயனாளர்களின் எண்ணிக்கையை விட அதிகமாகும். அத்துடன் ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான மாற்றுத்திறனாளிகள், சிறுநீரக நோயாளர்கள், மற்றும் சிரேஷ்ட பிரஜைகளுக்கு உதவித் தொகை வழங்கப்படும் என குறிப்பிட்டுள்ளார். (4)

# முதன்முதலாக
# கறுப்பு ஜூலை நினைவாக பிரான்சில் நினைவுக்கல்




(பாரிஸ்)

பிரான்சில் ஓர் வரலாற்று நிகழ்வாக உலகில் முதலாவது கறுப்பு யூலை நினைவுக்கல் நிறுவப்படவுள்ளது.

இலங்கை அரசினால் திட்டமிட்டு நடாத்தப்பட்ட தமிழின அழிப்பான "கறுப்பு யூலை" 40 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு பொண்டி (bondy) நகரில் கறுப்பு யூலை நினைவுக்கல் திரைநீக்கம் செய்யும் நிகழவும் நாளை மறுதினம் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

உலகப் பரப்பில் கறுப்பு யூலை நினைவாக நிறுவப்படும் முதலாவது நினைவுக்கல் இது என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# பேருந்து குடைசாய்ந்து விபத்து 15 பேர் மருத்துவமனையில்



(கொழும்பு)

தெமோதரை பகுதியில் தனியார் பயணிகள் பேருந்து ஒன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

தெமோதரை நீர் விநியோக சபைக்கு அருகில் நேற்று காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.


கொழும்புக்கும் பதுளைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தின் காரணமாக பேருந்து முற்றாக தலைகீழாக கவிழ்ந்துள்ளதுடன் விபத்துக்கான காரணம் இது வரையில் தெரிய வரவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேருந்தில் பயணித்த 15 பேர் வரை காயமடைந்துள்ளதாகவும், அவர்கள் பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் எல்லபொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (4)

# மரண அறிவித்தல்



| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 1944 - 04 - 05 | | 2023 - 07 - 14 |

## அமரர். தம்பிராசா மகேஸ்வரன்


ஏழாலை மேற்கைச் சேர்ந்த தம்பிராசா மகேஸ்வரன் 14.07.2023 அன்று காலமானார். அன்னார் காலம் சென்றவர்களான தம்பிராசா, கனகம்மா ஆகியோரின் அன்பு மகனும் அமரர்களான வேலுப்பிள்ளை, தங்கம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் சந்திரகுமாரியின் அன்புக் கணவரும் ஐங்கரன் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), சிவகரன் (ஓம்காரா மிக்சர் உற்பத்தித் தொழிற்சாலை), சுதாகரன் (ஆசிரியர், வயாவிளான் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிந்துஜா, பிரணவசொரூபி (உதவி பிரதேச செயலாளர்-ஊர்காவற்றுறை), தாரணி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-யாழ் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் தங்கேஸ்வரி (கனடா), யோகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஷாலினி, நர்மன், அவந்திகன், துர்க்கேசன், மேருகா, பிரதிகா, தாருண் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நீர்வேலி கரந்தன் சந்தியில் உள்ள அன்னாரின் மகன் சுதாகரன் இல்லத்தில் இன்று 16.07.2023 நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(16298)

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண அரசு கால வரலாறு கூறும் சங்கிலியன் தோரண வாசல்




வடஇலங்கையில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசு ஏறத்தாள 350 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்துள்ளது. பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், ஐரோப்பியர் கால ஆவணங்கள் இவ்வரசு பற்றியும் அதன் நான்குபக்க அரண்கொண்ட அரச மாளிகை, அதிலிருந்த பெரிய ஆலயம், அரச அதிகாரிகள் மற்றும் படைவீரர்களின் இருப்பிடங்கள், பூங்காவனம், புனித ஜமுனா ஏரி, நீதி மன்றம், நாற்றிசைக் கோவில்கள், காவலரண்கள், கோட்டைகள் முதலியன பற்றியும் கூறுகின்றன.

அவ்வரலாற்றை மீள் நினைவுபடுத்துவதாகவே இன்றும் நல்லூரின் சிறிய வட்டாரத்திற்குள் எஞ்சியிருக்கும் ஜமுனா ஏரி, மந்திரிமனை, சங்கிலியன் அரண்மனை, சங்கிலியன் தோரணவாசல் முதலான மரபுரிமைக் கட்டிடங்களும், நினைவுச் சின்னங்களும் காணப்படுகின்றன.

நல்லூரில் அரசமைத்த பாண்டியப் படைத் தளபதிகளான ஆரியச் சக்கரவர்த்திகளின் வழிவந்தவர்கள் சிங்கையாரியன், கங்கைநாடான், சேதுகாவலன் என்ற சிறப்புப் பெயர்களையும், செகராசசேகரன், பரராசசேகரன் என்னும் சிங்காசனப் பெயர்களையும் பெற்றிருந்தனர்.

இவர்களின் ஆட்சி 1567இல் முடிவுற்றதன் பின்னர் இங்கு முதலாம் சங்கிலி, காசிநயினார், பெரியபிள்ளை, புவிராஜபண்டாரம், எதிர்மன்னசிங்க குமாரன், இரண்டாம் சங்கிலி முதலான சுதேசமன்னர்களின் ஆட்சி நிலைபெற்றது. இவ்வரசமைந்த பிரதேசத்தை 14 ஆம் நூற்றாண்டுக்குரிய நம்பொத்த என்ற சிங்கள நூல் தெமளபட்டன (தமிழ்ப்பட்டினம்) எனவும், பாளி இலக்கியங்கள் ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு எனவும் தமிழ் இலக்கியங்கள் நல்லூர் இராசதானி, யாழ்ப்பாண இராச்சியம் எனவும், தமிழகக் கல்வெட்டுகள் யாழ்பாண யன்பட்டினம், யாழ்ப்பாண தேசம் எனவும் போத்துக்கேயர் ஆவணங்களில் யவ்னா எனவும் கூறுகின்றன.

1658 இல் ஒல்லாந்து தேசாதி பதியாக இருந்த பான்கூன்ஸ் என்பவர் இவ்வரசின் ஆதிக்கம் திருகோண மலையிலிருந்து கற்பிட்டிவரையான ஒரு நேர்கோட்டின் மூலம் இலங்கையின் ஏனைய பகுதியிலிருந்து பிரிக்கப்பட்டிருந்ததாகக் கூறுகின்றார்.

இந்நிலையில் கி.பி. 14 ஆம் நூற்றாண்டு இலங்கை அரசியல் நிலை தொடர்பாக ராஜாவலிய என்ற சிங்கள நூல் தென்னிலங்கையில் இருந்த கம்பளை, றயிகம அரசைக் காட்டிலும் யாழ்ப்பாண அரசு படைப் பலத்திலும், பொருளாதார வளத்திலும் மேலோங்கியிருந்ததாகவும், யாழ்ப் பாண மன்னன் மலைநாட்டிலிருந்தும், கீழ்நாட்டிலிருந்தும், ஒன்பது துறைமுகங்களில் இருந்தும் திறை பெற்றான் எனவும் கூறுகின்றது.

மேலும் சமகால வரலாறு கூறும் நிகாய, சங்கிரகய மற்றும் ராஜாவலிய முதலான சிங்கள நூல்கள் கம்பளை அரசனுக்கு எதிராக யாழ்ப்பாண மன்னன் அனுப்பிய படை, தரை வழியாகவும் கடல்வழியாகவும் நீர் கொழும்பு, சிலாபம், வத்தளை, கொழும்பு, தெமட்டக்கொடை, கோற் கான ஆகிய இடங்களைக் கைப்பற்றியதாகக் கூறுகின்றன.

இதை தென்னிலங்கையில் கேகாலை மாவட்டத்தில் கொட்டகம என்ற இடத்தில் கிடைத்த யாழ்ப்பாண அரசுகாலக் கல்வெட்டும் உறுதிசெய் கின்றது. இந்நிலையில் யாழ்ப்பாணத்தின்மீது போத்துக்கேயர் படையெடுத்த காலத்தில் சங்கிலி மன்னன் தலைநகரைப் பாதுகாக்க 12000 இற்கும் மேலான போர் வீரர்களை நிறுத்தியிருந்தான் என குவேறோஸ் சுவாமியார் கூறுகின்றார்.

கி.பி. 14 ஆம் நூற்றாண்டு இலங்கை வந்த மொறோக்கோ நாட்டுப் பயணியான இவுன் பற்றுற்றா தான் ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்களில் ஒருவனை பத்தள என்ற இடத்தில் (புத்தளம்?) சந்தித்து உரையாடியது பற்றியும் அம்மன்னனின் பண்பு, பரோபகாரம், கடற்படைக் கப்பல்கள், மிகப்பெரிய அளவில் நடைபெற்ற வெளிநாட்டு வர்த்தகம், அம்மன்னன் தங்கியிருந்த துறைமுகத்திற்கு அருகே மலைபோலக் குவிக்கப்பட்டிருந்த கறுவாவினை; மலையாளம், தமிழகத்திலிருந்து வந்த வணிகர்கள் புடவைகளைக் கொடுத்து அதற்குப் பதிலாக கறுவாவைப் பெற்று கப்பல்களில் ஏற்றிச் சென்றமை என்பன பற்றி தனது நூலில் விரிவாகக் கூறுகின்றார்.

மேலும் அவர் ஆரியச்சக்கரவர்த்தி மன்னனுடைய நூற்றுக்கணக்கான கப்பல்கள் ஒரு சமயத்திலேயெமென் தேசத்தை நோக்கி சென்றுகொண் டிருந்ததைத் தான் பார்த்ததாகவும் குறிப்பிடுகிறார்.

இவ்வரலாற்று ஆதாரங்கள் போத்துக்கேயர் இலங்கை வந்த காலத்தில் கோட்டை கண்டி அரசுகளைப் போல் யாழ்ப்பாண அரசும் பலமான நிலையில் இருந்துள்ளதைக் காட்டுகின்றன. ஆயினும் தென்னிலங்கை இராசதானிகளின் மரபுரிமைச் சின்னங்கள் பெருமளவுக்குப் பாதுகாக்கப்பட்டிருப்பதைப் போல் யாழ்ப்பாண அரசு கால மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப்படவில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் வடஇலங்கையில் ஆட்சிபுரிந்த போத்துக்கேயரும் பின் வந்த ஒல்லாந்தரும் சுதேச மக்களின் கலைமரபிற்குரிய கட்டிடங்களை அழித்துவிட்டு அவ்விடங்களில் தமது கலைமரபிற்குரிய கட்டிடங்களை அமைத்தமை முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

அவற்றுள் இரண்டாம் சங்கிலி மன்னனை வெற்றி கொண்ட போத்துக்கேயர் சிறிது காலம் நல்லூர் இரசதானியைத் தமது நிர்வாக மையமாகப் பயன்படுத்திவிட்டு, பின்னர் அங்கிருந்த கட்டிடங்களை அழித்து அவ்விடங்களில் தமது கலைமரபில் கத்தோலிக்க தேவாலயம், நிர்வாக மையங்களை அமைத்தனர்.

பின் வந்த ஒல்லாந்தர் நல்லூர் இராசதானியிலும், பிற இடங்களிலும் இருந்த போத்துக்கேயரது கட்டிடங் களை தமது கலைமரபிற்குரிய கட்டிடங்களாக மாற்றியமைத்தனர். அவற்றை வடஇலங்கையின் பல இடங்களிலும் இன்றும் காணமுடிகின்றது.

மேலும் மதம் மாறி முதலியார், கங்காணி முதலான பதவிகளைப் பெற்ற சுதேசிகளும் தமது வாசஸ் தலத்தை, அதன் முகப்பை ஒல்லாந்தர் கலைமரபில் அமைத்துக் கொண்டனர். ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் மத சுதந்திரம் பெற்ற சுதேச மக்கள் யாழ்ப்பாண் இராசதானி கால இந்து ஆலயங்கள் இருந்த இடங்களில் அல்லது அதற்கு அருகில் பழைய பெயரில் புதிய ஆலயங்களை கட்டிய போது ஒரு சில ஆலயக் கட்டமைப்பிலும் ஒல்லாந்தர்காலக் கலைமரபின் செல்வாக்கு ஏற்பட்டது.


இவை தமிழரின் பாரம்பரிய கட்டிடக் கலைமரபில் புதிய கலை மரபின் செல்வாக்கும் இணைந்து கொண்டதைக் காட்டுகின்றது. இதற்கு யாழ்ப்பாண இராசதானி கால மரபுரிமைச் சின்னங்களும் விதிவிலக்காக இருக்கவில்லை.

ஐரோப்பியரது 327 ஆண்டுகால ஆட்சியில் யாழ்ப்பாணம் அதன் நிர்வாகத் தலைமைப்பீடமாக இருந்த போதும் நல்லூர் இரசதானி இருந்த இடம் அவர்களது நிர்வாக, சமய, பண்பாட்டு நடவடிக்கைகளின் முக்கிய மையங்களில் ஒன்றாக இருந்துள்ளது. இதன் மூலம் நல்லூர் இராசதானிகால வரலாற்று நினைவுகள் தொடரவும் அதன் மரபுரிமைச் சின்னங்கள் புதிய கலைமரபுடன் இணைந்து வளர்வதற்கும் வாய்ப்பாக இருந்தது. அதன் ஒரு அடையாளமாகவே தற்போது மீளுருவாக்கப்பட்ட சங்கிலியன் தோரண வாசல் பார்க்கப்படுகின்றது. இந்நினைவுச் சின்னம் வேறு சில பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டிருந்தாலும் தமிழ் மக்களின் நீண்டகால வரலாற்றில் சங்கிலியன் தோரண வாசல் என்ற பெயரே நிலைத்திருக்கின்றது.

1970 க்குப் பின்னர் இந்நினைவுச் சின்னத்தைப் பாதுகாக்க யாழ்ப்பாணத்து அரச நிர்வாகம், பொது அமைப்பு, தனிநபர்கள் சில முயற்சிகளை எடுத்துள்ளனர். 2007 இல் இலங்கைத் தொல்லியற் திணைக்களம் இதை யாழ்ப்பாண அரசுகால மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

2021 இல் உருவான யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் நிதிப்பங்களிப்போடு தொல்லியல் திணைக்கள அனுமதியும் அனுசரணையும் பெற்று இந்நினைவுச் சின்னம் இன்று மீளுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் இராசதானி காலத்தை நினைவுபடுத்தும் மரபுரிமைச் சின்னங்களில் ஆரியகுளத்தை தொடர்ந்து மீளுருவாக்கம் செய்யப்பட்டு பாதுகாக்கப்படும் இரண்டாவது மரபு ரிமைச் சின்னம் என்ற பெருமை இச்சங்கிலியன் தோரண வாசலுக்கு உண்டு.



பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
தலைவர்
யாழ்ப்பாண மரபுரிமை மையம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மீண்டும் எம்.பி. பதவியை கோரும் முஜிபுர் ரஹ்மான்

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் முஜிபர் ரஹ்மான் மீண்டும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பெறும் நோக்கில் நீதிமன்றத்தை நாட தீர்மானித்துள்ளார்.

தேர்தல் நடத்தப்படாவிட்டால் தாம் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஜிபர் ரஹ்மான், உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வது குறித்து தனது வழக்கறிஞர்களுடன் ஏற்கனவே ஆலோசித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபையின் மேயர் பதவிக்கு போட்டியிடுவதற்காக தான் சபை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததாகவும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் தற்போது காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

## சுகாதார அவசர நிலையை அரசு பிரகடனப்படுத்த வேண்டும்

### மருத்துவ தொழில்துறை அமைப்பு

(கொழும்பு)

சுகாதார நெருக்கடி தொடர்பில் அவசர நிலையை பிரகடனம் செய்யுமாறு மருத்துவதொழில் துறையினர் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

மருந்துகள் தொடர்பிலான பாதிப்புகளால் அதிகளவானவர்கள் உயிரிழப்பதன் காரணமாக தேசிய அவசரநிலையை அறிவிக்கவேண்டும் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் மன்றத்தின் தலைவர் வைத்தியர் ருக்சான் பெலான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியாவின் கடனுதவியுடன் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் தொடர்பில் சந்தேகம் காணப்படுகின்றது என தெரிவித்துள்ள வைத்தியர் ருக்சான் பெலான இந்த விவகாரத்தை எவ்வாறு கையாளவேண்டும் என அமைச்சரவை ஆராய வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுகாதாரதுறையை சேர்ந்த ஏனைய அமைப்புகளுடன் இணைந்து இந்திய தூதரகத்தின் ஊடாக இந்தியாவிற்கு கடிதமொன்றை அனுப்ப எண்ணியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(4)


### சொர்க்கம் திருமண சேவை

இலங்கையில் பிறந்த 33 மற்றும் 29 வயதுடைய (R.C) மணமகன்களுக்கு தகுந்த மணமக்களை யாழ்.மாவட்டத்தில் எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையில் பிறந்த 26 மற்றும் 24 வயதுடைய மணமகள்களுக்கு தகுந்த மணமகன்களை கனடாவில் எதிர்பார்க்கிறோம்.

கனடாவில் பிறந்த 35 மற்றும் 29 வயதுடைய மணமகள்களுக்கு தகுந்த மணமகன்களை கனடாவில் எதிர்பார்க்கிறோம்.

**தொடர்பு கொள்ள**
**001 416 666 1855 (கனடா)**
**077 200 0230,077 887 6969**
**077 650 5097 (யாழ்ப்பாணம்)**

(16300)



**Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna, Sri Lanka**
**(திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை)**
**வணிகமாணி சிறப்பு பட்டப்படிப்பு 2020/ 2021**
**Bachelor of Commerce Honours Degree Programme – 2020/2021**
**புதிய அனுமதிக்கான விண்ணப்பம் - 2023 - அணி-VII**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த நான்கு வருட கால வணிகமாணி சிறப்புக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

❖ க.பொ.த. (உ/த) பரீட்சை (வணிகப்பிரிவு) - 2020 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்.

**அல்லது**

❖ பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான தகைமையைக் கொண்டவர்கள்

**வணிகமாணியில் பாட அலகுகளிற்கான விலக்களிப்பு கோருதல்:**

வணிகமாணி கற்கை நெறியில் காணப்படும் பாட அலகுகள் அல்லது அதற்கு சமனான பாட அலகுகளை உள்ளடக்கிய கற்கை நெறிகளில் சித்தியடைந்தோர், உரிய தகைமைகளை குறிப்பிட்டு விலக்களிப்புக்கு விண்ணப்பிக்க முடியும். அவர்கள் தகைமை பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் பாட அலகுகளிற்கான விலக்களிப்பு அனுமதிக்கப்படும்.

**மாணவர் தெரிவு:**

விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளியின் அடிப்படையில் (Z-Core) அல்லது பொது உளச்சார்புப்பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது மூன்றின் மூலமும் தெரிவு செய்யப்படுவார்கள். பொது உளச்சார்புப் பரீட்சையிற்கான தேவை ஏற்படின் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்:**

விண்ணப்ப கட்டணமாக ரூபா 1000 இனை **89007208000062** என்ற மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் செலுத்தி www.codl.jfn.ac.lk எனும் இணைய முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை முறையாக பின்பற்றி https://www.codl.jfn.ac.lk/index.php/bcom-batch-vii/ எனும் இணைப்பின் ஊடாக விண்ணப்பித்துக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 04.08.2023 (வெள்ளிக்கிழமை) (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)**

மேலதிக விபரங்களை 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணூடாக அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணைய தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி.**
**16.07.2023**

(சி-6922)


## இராசிபலன்

16.07.2023
ஆனி 31, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 10.59 மணிவரை

திருவாதிரை பின்னிரவு 03.51
மணிவரைசுபநேரம் -9.00-10.30 மணிவரை
இராகுகாலம்-4.30-06.00 மணிவரை

சந்திராஷ்டமம்- அனுசம்.

**வளவன்**



நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.



பொதுவாழ்வில் புகழ் கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.



இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், மன ஆறுதல் தரும் வகையில் வாகனப் பயணம் ஒன்று ஏற்படலாம், குடும்பத்தில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள்.



குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள், வழிபாடு மகத்துவம் தரும், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.



புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.



அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வரலாம், கனவுப் பலிதமுண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள் ,கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள். போசன சுகமுண்டு.



எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு. ஆன்றோர்களின் சந்திப்புண்டு.



சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காண வேண்டியநாள், வரவைக் காட்டிலும் செலவு கூடலாம், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.



குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.



உற்றார் உறவினர்கள் கைகொடுத்து உதவ முன்வரலாம், வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.



உறவுகள் வழியில் மனதிற்கினிய சம்பவம் ஒன்று நடைபெறலாம், வளர்ச்சிப் பாதைக்கு வித்திடுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.




ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள், வர வேண்டிய பணவரவுகள் கைக்கு வந்து சேரலாம், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்


**உன் பெயர் தான் வியாபார அடையாளம். அதை உன் உயிர் போல் காப்பாற்று**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு நடத்தும் 'குளோபல் பெயார் - 2023' நடமாடும் சேவை







(யாழ்ப்பாணம்)

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவையான "குளோபல் பெயார்-2023" நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளி விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

குறித்த சேவையானது இன்றும் நடைபெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கொழும்புக்கு சென்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மூலம் பொதுமக்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய அனைத்து சேவைகளையும் கொழும்புக்கு வராமல் யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக்கொள்ளுவதற்கான வாய்ப்பை குளோபல் பெயார் வழங்குகிறது.

ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி தொடர்பான பிரச்சினைகள், வெளிநாட்டு தொழில் வாய்ப்பு தொடர்பான விடயங்கள், வெளிநாட்டலுவல்கள் அமைச்சகத்தின் தூதரகத் துறையின் சேவைகள் முதலானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்வதற்கு தேவையான வசதிகள் குளோபல் ஃபேர்-2023 இல் செய்யப்பட்டுள்ளன.

உள்நாடு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கான சந்தர்ப்பமும் கிடைக்கும்.

பயிற்சி பெற்றும் சான்றிதழ் இல்லாதவர்களுக்கு தொழில் பயிற்சி அதிகார சபை மூலம் சான்றிதழ் வழங்கப்படும். மாற்றுத்திறனாளிகளைப் பொறுத்தவரை, அவர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி தொடர்பில் தேவையான சேவைகள் வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்விற்கு வலம்புரிப் பத்திரிகை ஊடக அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது (4-33-104)

## இலவச சித்த மருந்தகம் மிருசுவிலில் திறந்து வைப்பு



(சாவகச்சேரி)

உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்ட நிதி மற்றும் சபை நிதிப் பங்களிப்பு மூலம் நிர்மாணிக்கப்பட்ட சாவகச்சேரிப் பிரதேசசபையின் மிருசுவில் உப பணிமனையும் மற்றும் அதனுடன் இணைந்த இலவச சித்த மருந்தக திறப்புவிழா வைபவமும் கடந்த வெள்ளிக்கிழமை மதியம் மிருசுவில் பகுதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரிப் பிரதேசசபைச் செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற மேற்படி திறப்பு விழா நிகழ்வுகளில் பிரதம அதிதியாக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் கலந்து சிறப்பித்தார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன், வடக்கு மாகாண சுதேச மருத்துவ ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி ஜெபநாம கணேசன் கனகேஸ்வரி மற்றும் யாழ்மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ.ஸ்ரீவர்ணன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது கட்டட நினைவுக் கல்லை வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் திரை நீக்கம் செய்து வைக்க, மிருசுவில் உப பணிமனை அலுவலகத்தை மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதனும், இலவச சித்த மருந்தகத்தை வைத்தியக் கலாநிதி கனகேஸ்வரியும் திறந்து வைத்திருந்தனர்.

மேற்படி கட்டடமானது உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்ட நிதி மற்றும் சபை நிதி என மொத்தமாக 26மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-30)

## வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற பழமையான வாகனங்களின் பவனி



(அராலி)

வட்டுக்கோட்டையில் தமிழர் தாயகத்தில் தற்போதும் பாவனையிலுள்ள பல பத்தாண்டுகளுக்கு முற்பட்ட வாகனங்களின் பவனி நேற்று இடம்பெற்றது.

பழமை வாய்ந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பழைய மாணவர் வார ஆரம்ப நிகழ்வான நடை பவனி மற்றும் வாகன பவனியிலேயே இந்த பழமை வாய்ந்த வாகனங்கள் பவனி வலம் வந்தன.

புலம்பெயர் தேசங்கள் முழுவதிலும் இருந்து வருகை தந்துள்ள கல்லூரியின் பழைய மாணவர்கள் இந்த நிகழ்வுகளில் பங்கேற்றனர். (4-104)



யாழ். ஊடக அமையத்தின் எற்பாட்டில், கடந்த 25 வருடத்திற்கு மேலாக சிரேஷ்ட ஊடகவியாலாளராகவும், தற்போதுயாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதியாகவும் கடமையாற்றி உள்ள சி.ரகுராமிற்கு கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் மாலை நாச்சிமார் ஆலயத்தில் அருகாமையில் அமைந்துள்ள தனியார் விடுதியில், மூத்த பத்திரிகையாளர் சி.பாரதி தலைமையில் நடைபெற்றது. (படம் : கஜிந்தன்)

## உள்ளூர் இழுவைப் படகுகளை கட்டுப்படுத்த முடியாதவர்கள் இந்திய படகுகளை எவ்வாறு கட்டுப்படுத்துவர்?

### சிறீதரன் எம்.பி கேள்வி

(யாழ்ப்பாணம்)

யாழ் நெடுந்தீவைச்சூழ பத்து கடற்படை முகாம்கள் உள்ளது அதைவிட இலங்கையின் மீன்பிடி அமைச்சரும் இருக்கின்றார் ஆனால் உள்ளூர் இழுவைப்படகுகளை கூட கட்டுப்படுத்த முடியவில்லை இந்திய இழுவைப்படகுகளை கட்டுப்படுத்த நாங்கள் கூட்டாக இந்தியாவில் போய் பேசுவோம் என்று மக்களிடம் தவறான கருத்துக்களை கூறி மக்களை பிழையாக வழிநடத்த வேண்டாம் என அமைச்சர் டக்ளஸ் தேவானாந்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பதிலளித்துள்ளார்

நெடுந்தீவு பிரதேசத்துக்கான பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று முன்தினம் நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நெடுந்தீவு கடலில் நாளாந்தம் 400 முதல் 500 உள்ளூர் மற்றும் இந்திய இழுவைப்படகுகள் இவர்களது வாழ்வாதாரத்தை அழிக்கின்றன. ஆனால் நெடுந்தீவு பிரதேசத்தை சூழ பத்து வரையான கடற்படை முகாம்கள் உள்ளது இவ்வாறு இருக்கின்ற கடல் படையாலும் கடற்றொழில் அமைச்சராலும் இதனை தடுக்க முடியவில்லை இந்திய இழுவைப்படகளை கட்டுப்படுத்த நாங்கள் கூட்டாக இந்தியாவில் போய் பேசுவோம் என்று மக்களிடம் தவறான கருத்துக்களை கூறி மக்களை பிழையாக வழிநடத்த வேண்டாம்.

நெடுந்தீவு மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அந்த மக்கள் கருத்துக்களை தெரிவிக்க இடமளிக்கப்படவேண்டும் என்றும் தெரிவித்த அவர், இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக நாங்கள் இந்தியாவில் போய் பேசுவோம் என்று எங்கும் நாங்கள் சொல்லவில்லை மக்களிடம் தவறான கருத்துக்களை கூறி மக்களை தவறாக வழிநடத்த வேண்டாம்

யாழ்ப்பாணத்தில் நாங்கள் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து கலந்துரையாடினோம் அப்படி எந்த விதமான முடிவுகளும் எடுக்கப்படவில்லை உள்ளூர் படகுகளை தடுக்க வேண்டிய பொறுப்பு கடற்படைக்கு உள்ளது.

1991 ஆம் ஆண்டு அமைச்சர் இங்கு வரும்போது பொலிஸ் இருக்கவில்லை கடற் படை இருக்கவில்லை என்று அவரே சொன்னார் ஆனால் இப்போது கடற்படை இருக்கின்றது பொலிஸ் இருக்கின்றது சகல பாதுகாப்புகளும் இருக்கின்றது அமைச்சராக இருக்கின்றார் இவ்வாறு இருக்கின்ற நிலைமையில் தான் இந்த மக்களினுடைய வாழ்வாதாரம் அழிக்கப்படுகின்றது. இதனை தடுப்பதற்கான முடிவை யார் எடுப்பது கடற்படையா? அல்லது இளைஞர்களா? என தெரிவித்தார். (4-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 406
Viber 076 636 3378



# நெருக்கமடையும் இருதரப்பு உறவு



இராஜதந்திர ரீதியில் தாமதமாகிக் கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியாவுக்கான உத்தியோக பூர்வ விஜயம்இம்மாதம் 20 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

புதுடில்லிக்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் அந்நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட உயர்மட்ட அரச தலைவர்களை சந்தித்து இருதரப்பு பேச்சு வார்த்தைகளை நடத்தவிருக்கின்றனர்.

தற்போதைய அரசியல் சூழலில் ஜனாதிபதியின் இந்த இந்திய விஜயம் மிக முக்கியத்துமாக அமைந்திருக்கின்றது. உள்நாட்டு மற்றும் பூகோள அரசியல் ரீதியிலும் பிராந்திய அரசியல் விவகாரங்களிலும் ஜனாதிபதியின் இந்திய விஜயம் மிகவும் முக்கியத்துவமிக்கதாக பார்க்கப்படுகிறது.

அடுத்த வருடம் தேசியமட்ட தேர்தல் ஒன்று நடைபெறும் என்கிற சூழலிலும் மாகாண சபை தேர்தல்கள் தாமதமடைந்திருக்கின்ற நிலையிலும் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து இலங்கை மீண்டு வருகின்ற பின்னனியிலும் இந்த விஜயம் இடம்பெறுகின்றது.

## தாமதிக்கப்பட்ட விஜயம்

கடந்த வருடம் ஜூலை மாதம் 20 ஆம் திகதியே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றார். இவ்வருடம் ஜூலை மாதம் 20 ஆம் திகதியே இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொள்கிறார். அதன்படி, ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் செய்கின்ற முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

பொதுவாக இலங்கையில் ஜனாதிபதிகள் தெரிவு செய்யப்பட்டதுடன் முதலாவது விஜயமாக இந்தியாவுக்கு செல்வதே வழக்கமாக இருந்தது. எனினும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவியேற்றதன் பின்னர் இந்தியாவுக்கு செல்வதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை.

அதற்கு முன்னதாக பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுக்கு இருதரப்பு விஜயங்களை மேற்கொண்டிருந்தார். அந்தவகையில் மிகவும் தாமதிக்கப்பட்ட நிலையிலேயே ஜனாதிபதி ரணிலின் இந்திய விஜயம் இடம் பெறுகி றது.

## ஒரு வருட மதிப்பீடு

ஜனாதிபதி ரணில் கடந்த வருடம் 20 ஆம் திகதி ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், கடந்த ஒரு வருட காலமாக இந்தியா இலங்கை நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வந்தது என்றே கூற வேண்டும்.

அதாவது ஆரம்பத்தில் இருதரப்பு உறவு விடயத்தில் பல்வேறு விடயங்கள் செல்வாக்கு செலுத்தி இருந்தன. ஆனால் இந்த ஒரு வருட காலத்தில் இந்தியா இலங்கைக்கு பல்வேறு வழிகளிலும் உதவிகளை வழங்கியிருந்தது.

குறிப்பாக இந்தியா இந்த ஒரு வருட கால பகுதியிலேயே இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் கடனை பெற்றுக் கொள்வதற்கு முதலாவதாக சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு நிதியியல் உத்தரவாதத்தை வழங்கியது. அதன் பின்னரே ஏனைய நாடுகள் அதனை பின்பற்றி உத்தரவாதத்தை வழங்கின.

அந்தவகையில் கடந்த 12 மாதங்களில் இந்தியா பல வழிகளில் இலங்கைக்கு உதவிகளை செய்து கொண்டே வந்திருக்கின்றது. ஆனால் ஒரு வருட காலமாக ஜனாதிபதியின் இருதரப்பு விஜயம் இடம்பெறாமலே நீடித்து வந்தது.

## இந்தியாவுடன் நெருங்கிய இலங்கை

மேலும் கடந்த ஒரு வருட காலமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் இந்தியாவுக்கு சார்பானதாக பல்வேறு இராஜதந்திர அணுகுமுறைகளை மேற்கொண்டிருந்தது.

கடந்த வருடம் சீனாவின் ஒரு போர் கப்பல் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டது. இது இராஜதந்திர மட்டத்தில் புதிய நிலைமைகளை தோற்றுவித்தது. ஆனால், அந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் இராஜதந்திரமாக செயற்பட்டு இந்தியாவின் நன்மதிப்பை பெற்றுக் கொண்டார் என்றே கூற வேண்டும்.

சர்வதேச நோக்குனர்கள் அவ்வாறே அதனை விளக்குகின்றனர். அதன் பின்னரும் தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவை பல்வேறு இடங்களிலும் பாராட்டி பேசியிருந்தார். முக்கியமாக இந்தியாவும் இலங்கையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்று ஜனாதிப்தி அடிக்கடி கூறிவந்திருந்தார்.

அதுமட்டுமின்றி ஜனாதிபதி முதலாவதாக பாராளுமன்றத்தில் கொள்கை பிரகடன உரையை நிகழ்த்தியபோது மூச்சு விடுவதற்கு உதவிய இந்தியாவுக்கு நன்றி தெரிவிப்பதாக கூறியிருந்தார். இவை தொடர்பான தொடர்ச்சியான அவதானிப்புகளின் பின்னரே இந்தியா தற்போது இலங்கையுடன் நெருங்கி செயற்படுவதற்கு முன்வந்திருப்பதாக தெரிகின்றது.

## மூச்சுவிட உதவி இந்தியா

2022 ஆம் ஆண்டு நெருக்கடி காலப்பகுதியில் இந்திய இலங்கைக்கு 3 தசம் எட்டு பில்லியன் கடன் உதவி வழங்கியது. தெற்காசிய நாணய பரிமாற்று ஏற்பாடுகள் திட்டத்தின்கீழ் இலங்கைக்கு 400 மில்லியன் டொலர்கள், 500 மில்லியன் டொலர் கடன் ஒன்றை செலுத்து வதற்கான உதவி, 1.5 பில்லியன் டொலர்கள் கடனுதவி இலங்கை இந்தியாவுக்கு செலுத்த வேண்டியிருந்த ஒரு பில்லியன் டொலர் கடனுதவி நீடிக்கப்பட்டமை மற்றும் 500 மில்லியன் டொலர் விசேட கடன் என்பன இந்தியாவினால் 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின்போது இலங்கைக்கு வழங்கப்பட்டன.

அந்த கடன் உதவியின் ஊடாகவே இலங்கையை கடந்த ஒரு வருட காலமாக எரிபொருள் உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசிய பொருட்களை வரையறுக்கப்பட்ட நிலையிலாவது பெற்றுக்கொள்ள கூடியதாக இருந்தது.

இந்தியாவின் உதவி அந்த நேரத்தில் வழங்கப்பட்டிருக்காவிடின் இலங்கையின் நிலைமை மேலும் மோசமடைந்திருக்கும் என்பதே நிபுணர்களின் கருத்தாகவுள்ளது. இந்த பின்னணியிலேயே தற்போது ரணில் - மோடி உறவு நெருக்கமடைந்து வருவதை காண முடிகிறது.

## இந்திய வெளியுறவு செயலரின் வருகை

இதனிடையே ஜனாதிபதியின் இந்திய விஜயம் குறித்து ஆராய இலங்கை வந்த இந்திய வெளியுறவு செயலர் வினய் மோகன் குவத்ரா இந்தியாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு டில்லியில் அன்பான வரவேற்பு காத்திருக்கிறது. ஜனாதிபதியின் இந்த விஜயமானது இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் சாதகமான மாற்றத்துக்கான ஒரு புள்ளியாக அமையும் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தை வெற்றியடைச் செய்வதே எமது இலக்காகும். அவர் நன்கு அறியப்பட்ட தலைவர் என்பதோடு, இந்திய - இலங்கை உறவின் மிகவும் வலுவான ஆதரவாளருமாவார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவை இருநாடுகளின் உறவு மிக நெருக்கமாக வலுவடைவதையே காட்டுகின்றன.

இந்நிலையில் இம்முறை ஜனாதிபதியின் இந்திய விஜயமானது அரசியல் ரீதியிலும் இராஜதந்திர ரதியிலும் பிராந்திய மட்டத்திலும் மிக முக்கியத்துவம் மிக்கதாக பார்க்கப்படுகிறது.

முன்னரை விட தற்போது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவு நெருக்கமடைந்திருக்கின்றது என்பதே நோக்குனர்களின் அரசியல் ஆய்வாளர்களின் சர்வதேச ஆய்வாளர்களின் பார்வையாக அமைந்திருக்கிறது. விஜயத்தின் பெறு பேறுகள் எவ்வாறு இருக்கும் என்பதனை தற்போதே க்ணிக்க பலரும் ஆரம்பித்துவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் பண்டிதர் பரமலிங்கத்தைத் தவிர, ஏனையவர்கள் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:** என்ன? எப்பவும் நேரகாலத்தோட வாற பண்டிதர் பரமலிங்கத்தை இன்றைக்கு காணவில்லை. என்ன சங்கதியோ தெரியல்ல.

இவ்வாறு கங்காணியார் கூற அந்நேரம் பார்த்து பண்டிதரும் ஆலடிக்கு வந்துசேர்ந்தார். பண்டிதரின் கையில் ஒரு பைல். இதனைப் பார்த்த மூப்பர் என்ன? பண்டிதர் ஐயா! குடிசன மதிப்பீடு எடுக்கப் போறியளோ.

**பண்டிதர்:** அப்படியொரு குடிசன மதிப்பீட்டையும் நான் எடுக்கவில்லை. எங்கட ஆலடிப் பிள்ளையார் கோவிலில அறநெறி வகுப்பை ஆரம்பிப்பம் எண்டுதான் மாணவர்களின்ர பெயர் விபரங்களை எடுத்துக் கொண்டு வாரன்.

**சாத்திரியார்:** இது ஒரு நல்ல விடயம். ஒவ்வொரு ஆலயங்களும் அறநெறி வகுப்புக்களை நடத்துமாக இருந்தால், எங்கட பிள்ளைகள் நிச்சயம் சரியான பாதையில பயணிப்பினம்.

**விதானையார்:** பண்டிதர் ஐயா! நான் உங்களுக்கு சொல்லத் தேவையில்லை. இருந்தாலும் அறநெறி வகுப்பில இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழுக்கும் முன்னுரிமை கொடுக்க வேணும்.

உதாரணத்துக்கு கொழும்பு இராமகிருஷ்ண மிஷனில, சனி, ஞாயிறு தினங்களில இசை வகுப்புக்கள் நடக்கும். மிருதங்கம், பாட்டு, நடனம், வயலின், வீணை என இசை வகுப்புக்கள் நடப்பதால அங்க ஏகப்பட்ட மாணவர்கள் வந்து படிக்கினம்.

உண்மையில சாரீரத்தோட பாடுறது, இசைக் கருவிகளை இசைப்பது என மாணவர்களின்ர திறன்களை விருத்தி செய்தால், பிறகென்ன அவர்கள் தாமாகவே முயற்சி செய்து தங்களை உயர்த்திக் கொள்ளுவினம்.

**சிறாப்பர்:** அதெண்டால் உண்மை தான். இந்தாப் பாருங்க zee தமிழ்த் தொலைக்காட்சி நடத்துகின்ற **சரிகமப...** என்ற நிகழ்ச்சியில எங்கட யாழ்ப்பாணத்து பிள்ளை கில்மிஷா பாடி அசத்தி வருகின்றார். அதைப் பார்க்கும் போது எவ்வளவு பெருமையாக இருக்குது.

**பண்டிதர்:** அது மட்டுமல்ல சிறாப்பர், அந்தப் பிள்ளை கதைக்கிறதும் நல்லா இருக்குது.

**சிறாப்பர்:** அதுதான் எங்கட பிள்ளைகளாலும் முடியும். நாங்களும் தமிழகத்து இசைத்துறைக்கு ஈடு கொடுக்க முடியும் என்பதற்கான ஓர் எடுத்துக்காட்டு தான் கில்மிஷா என்ற அந்தப் பிள்ளையின்ர பாட்டு. வடமராட்சி துன்னாலையைச் சேர்ந்த கில்மிஷா யாழ்ப்பாணம் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில படிக்கிறா. அந்த பிள்ளை zee தமிழ் நடாத்தும் சரிகமப... போட்டியில வெல்ல வேண்டும் என்று வாழ்த்திறத்தோட, அந்தப் பிள்ளை இசையில மகத்தான சாதனையைப் படைக்க எங்கட வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறம்.

இவ்வாறு சிறாப்பர் கனகசபை கூற, ஆலடியில் சிறிது நேரம் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:** எங்கட பிள்ளைகளை நல்வழிப் படுத்துவதாக இருந்தால், அதற்கான ஒரு வழி ஆன்மீகம் தான்.

ஆகையால வெள்ளி, ஞாயிறு தினங்களில அறநெறி வகுப்புக்களை ஆலயங்களில நடத்திறதோட, அந்தப் பிள்ளைகள் இறைவழிபாடு செய்வதற்கும் ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட வேணும்.

**சாத்திரியார்:** அதெண்டால் உண்மை தான். இப்ப ஆலயங்களில நடக்கிற பூசைவழிபாடுகளை பார்ப்பதற்குக் கூட ஆக்களில்லை. சிலவேளை பூசை நடக்குதோ இல்லையோ எண்டது கூடத் தெரிவதில்லை.

ஆனால் கோயில் உரிமை தொடர்பில நீதிமன்றங்களால கூட, பிணக்குகளைத் தீர்க்க முடியாமல் கிடக்குது.

**பண்டிதர்:** அதெண்டால் உண்மைதான். அராலிப் பகுதியில கோயில் காணிகளை தங்கட பெயருக்கு மாற்றியிருக்கினம் எண்டும் இந்த வேலையைச் செய்தது அந்தப் பகுதியைச் சேர்ந்த ஓர் அச்சகர் எண்டும் கதைபடுகுது.

**மூப்பர்:** அப்ப அந்த கோயில் காணிக்கு உரிமையாளர் இல்லையோ.

**பண்டிதர்:** ஏன்? இல்லை. அரசியல் புலத்தில மிகப் பெரும் செல்வாக்கு உடையவருக்குத்தான் அந்த உரிமை இருக்கிறதால, ஜனாதிபதி மட்டத்திலும் குறித்த காணிப் பிரச்சினை ஆராயப்படுகுதாம்.

**மூப்பர்:** அப்ப காணி பிடிச்ச அச்சகர் பாடு கஷ்டம் எண்டு சொல்லுறியள்.

**விதானையார்:** ஓ! இப்ப எங்கும் கள்ளக் காணி பிடிக்கிறதும். போட்டியும் பொறாமையும் கதைகட்டுறதும் தானே பரவலாக நடக்குது. படித்த மட்டத்திலேயே இப்படியான சம்பவங்கள் நடக்கும் போது சாதாரண மக்களும் அதில தானே ஈடுபடுவினம்.

**சிறாப்பர்:** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:** அண்மையில யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவு நடந்தது.

இப்ப முன்னரப் போல பேரவை உறுப்பினர்கள் வாக்களிக்கிற முறையில்லை. மாறாக ஒரு பெரிய பட்டியல் கொடுத்து அதில துணைவேந்தர் பதவிக்கு போட்டியிடுகிறவர்களுக்கு புள்ளியிட (மாக்ஸ்) வேணும். அவ்வாறு புள்ளியிடுகிறவர்களும் புத்திஜீவிகள் தான். ஆனால் அந்தப் புள்ளியிடல் நடந்ததில ஒரு நாடு ஒருவருக்கு சப்போட்டாக இருந்தது எண்டு பிரச்சாரம் செய்யப்பட்டிருப்பது குறித்துத் தான் பல்கலைக்கழக ஆசிரியர்கள் பலரும் கவலைப்படுகினம்.

**வாத்தியார்:** அதுமட்டுமல்ல துணைவேந்தர் தெரிவு இடம்பெற்று ஒருவரை அந்தப் பதவியில நியமித்ததும் துணைவேந்தர் தனக்கு ஒரு சப் துணைவேந்தரை நியமிக்க வேணுமாம். ஆனாலும் அப்படியொருத்தரை இன்னமும் எந்த துணைவேந்தரும் நியமிக்கவில்லை எண்டு சொல்லப்படுகுது.

அதால, இந்த முறை துணைவேந்தர் தெரிவின் போது ஒரு சப் துணைவேந்தரை நியமித்து அவரை உரிய கதிரையில இருத்தின பிறகு தான் துணைவேந்தர் தெரிவு இடம்பெற்றிருக்குது.

**கங்காணி:** அட! சங்கதி அப்படியோ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையில சிங்களவர்களும் இருப்பதால எங்கட சமாளிப்பு வேலைகளை செய்ய முடியாது தானே.

அதுதான் உரிய முறைப்படி சப் துணைவேந்தர் நியமிக்கப்பட்டு அதன் பின்பு துணைவேந்தர் தெரிவு இடம்பெற்றிருக்குது.

**சிறாப்பர்:** நல்லது... நல்லது... சிங்களவர்களிட்ட இருந்தும் சில ஒழுங்கு முறைகளை நாங்கள் கற்றுக் கொள்ள வேணும்.

இவ்வாறு சிறாப்பர் கூற, ஆலடியில் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க பண்டிதர் குரல் கொடுத்தார். பண்டிதர் அதுசரி யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் கிளினிக்குகள் இப்ப, யாழ் விக்டோரியா ரோட்டில இருக்கிற சுபாஸ் ஹோட்டல் காணியிலயல்லோ நடக்குது. இப்ப அந்தக் காணி உரிமையாளர்கள் அந்தக் காணியை விற்கப் போகினமாம் இதால பெரியாஸ்பத்திரியின்ர கிளினிக்க எங்க நடத்துறது எண்டு தெரியாமல், ஆஸ்பத்திரி நிர்வாகம் திக்குமுக்காடுது.

**சாத்திரியார்:** ஏன்? பண்டிதர் அந்தக் காணியை எங்கட யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை வாங்கினால் என்ன?

**பண்டிதர்:** அது 16 பரப்புக் காணி. இப்ப குறைஞ்சது ஒரு பரப்பு ஐந்தாறு கோடி ரூபா போகும். இந்தத் தொகையை அரசாங்கமும் தரப்போறதில்ல.

**விதானையார்:** இப்ப அரசாங்கத்தை எதிர்பார்க்க ஏலாது. ஏன் எங்கட புலம்பெயர் தமிழ் உறவுகள் நினைத்தால், காசு சேர்த்து அந்தக் காணியைக் கொள்வனவு செய்து எங்கட ஆஸ்பத்திரிக்கு கொடுக்கலாம் தானே.


**பண்டிதர்:** அப்ப புலம் பெயர் தமிழ் உறவுகள் அந்தக் காணியை வாங்குற விடயத்தில நடவடிக்கை எடுக்க வேண்டும் எண்டு ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவம் எனக் கூற, அதனை ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொள்ள, அதற்குத் தனது ஆசியும் இருப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



**யாழ்.பெரியாஸ்பத்திரியில கிளினிக் நடக்கிற காணி விலைப்படப் போகுது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இனப்படுகொலைகளை தாம் செய்ய வில்லை என அரசாங்கம் கூறி வருகிறதே ஏன்?

**திகான் — வடமராட்சி**

**கடலட்டை பண்ணை, கரும்புத் தோட்டங்கள் வடக்கை அழிக்கும் திட்டமா வியாசரே?**

அரசாங்கத்தினால் ஒரு திட்டம் மேற்கொள்ளப்படுகிறது எனில் அதன் சாதக பாதகங்களை தெளிவுற விளங்கிக் கொண்ட பின்பே மேற்கொள்ள வேண்டும்.

அதைவிடுத்து வடக்கை அபிவிருத்தி செய்கிறோம் எனக்கூறிக் கொண்டு அதை அழிக்கும் பாதக செயலை ஒரு போதும் செய்து விடக் கூடாது.

கடலட்டைபண்ணைகளுக்கும் சீனித்தொழிற்சாலைகளுக்கும் வடக்கில் எதிர்ப்புக்கள் இருக்கிறது எனின் அதில் ஏதோ ஒன்று உண்டு என்று தானே பொருள்.

**K.நிதுஷ் — யாழ்ப்பாணம்**

**வீதி விபத்துக்கள் அதிகம் இடம் பெறுவது எதனால் வியாசரே?**

எம்மவர்கள் அனைவரிடத்திலும் சாரதி அனுமதிப்பத்திரம் இருக்கிறதே தவிர வீதி விதிகள் எது எப்படி என்பது இம்மியும் தெரியாது.

இதற்கு முக்கிய பொறுப்பாக இருப்பவர்கள் சாரதி பயிற்சிப் பாடசாலைகளே.

இதை நாம் சொல்லும் போது அவர்களுக்கு கோபம் பொத்திக் கொண்டு வரும். ஆனால் அது தான் உண்மை.

ஒருவருக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்க உம்மால் பயிற்சி வழங்கப்படுகிறது எனின் உங்களின் பயிற்சி எப்பேர்ப்பட்ட தேர்ச்சியுடையதாய் இருக்க வேண்டும் சொல்லுங்கள்.

**நா.முத்துக்குமார் — யாழ்ப்பாணம்**

**கனரக வாகனங்கள், பேருந்துகள் புகைகளைக் கக்கிக் கொண்டு செல்கின்றனவே இவற்றிற்கு புகைப் பரிசோதனை இல்லையா?**

வாகனப் புகைப் பரிசோதனை சூழல் மாசுபடுவதற்கு எதிரானவர்களால் கொண்டு வரப்பட்டது.

ஆனால் இன்று அதன் நோக்கம் மாறி விட்டது என்பது தான் பொருள்.

அந்தளவிற்கு வீதியால் வாகனங்கள் புகைக் கக்கிக் கொண்டே செல்கின்றன.

இதையெல்லாம் பாதுகாப்புக் கடமையில் இருப்பவர்களும் பார்த்துக் கொண்டு தான் இருப்பார்கள்.

ஆனால் வீதியின் முக்கில் ஒழிந்து நின்று மடக்கிப் பிடித்து எந்த வகையில் பைன் அடிக்கலாம் என்பதில் புகைப் பரிசோதனைத் துண்டு முக்கியம் பெறுகின்றது.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

**076 097 3126**

என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்
அல்லது ஆசிரியர், வியாசர் பதிவுகள், வலம்புரிப் பத்திரிகை, இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

**சி.சுரேசன் — பத்தமேனி**

**வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றி முன்பு பேசாது இருந்தவர்கள் இப்போது அது பற்றிப் பேசுகின்றனரே?**

வடக்கு-கிழக்கு தமிழர் பூர்வீக பூமி. அதை ஏதோ ஒரு வகையில் வெட்டியே தீர வேண்டும் என பேரினவாத அரசுகள் கங்கனம் கட்டி நின்றனர். அதில் வெற்றியும் கண்டனர்.

வடக்கு-கிழக்கில் பெரும்பாண்மை விகிதாசாரத்தை உட்புகுத்த செய்த சதியில் கிழக்கில் தமி ழர்கள் பூர்வீக பூமி பறிபோய் விட்டது.

இப்போது வடக்கை கூறையாடத் தொடங்கி விட்டனர். தொல்லியல் திணைக்களம் வன ஜீவராசிகள் திணைக்களம் எனும் போர்வையில்

**மதுவன் — மீசாலை**

**சமூக சேவை செய்பவர்களை சமூகத்தில் மதிப்பதில்லையே?**

சமூக சேவை என்பது வேலை வெட்டியில்லாதவர்கள் மேற்கொள்ளும் ஒரு செயல் என்றாகி விட்டது.

யாரும் சமூக சேவை செய்தால் அவருக்கு இதுதான் வேலை. இவர் இப்படித்தான் என அவர்களை மட்டம் தட்டி அவர்களை சமூக சேவை செய்யாது தடுத்து விடுவார்கள்.

சமூக சேவையாளர்களும் மன உழைச்சலுக்கு ஆளாகி அதிலிருந்து விடுபட்டு விடுவார்கள். இது காலம் காலமாக நடக்கும் செயல்.



கனரக வாகனங்கள், பேருந்துகள் புகைகளைக் கக்கிக் கொண்டு செல்கின்றனவே இவற்றிற்கு புகைப் பரிசோதனை இல்லையா?

**சுதன் — குப்பிளான்**

**இனப்படுகொலைகளை தாம் செய்ய வில்லை என அரசாங்கம் கூறி வருகிறதே ஏன்?**

வன்னிப் பெருநிலப்பரப்பில் இனப்படுகொலை நடந்ததற்கான அத்தனை ஆதாரங்களும் இருந்தும் இவர்கள் அதை மறுக்கிறார்கள் எனின் பூனை கண்மூடி பால் குடித்த கதையே.

கொத்துக் கொத்தாய் அப்பாவி பொது மக்கள் கொன்றழிக்கப்பட்டதை கொஞ்சம் கூட மனச்சாட்சி இன்றி மறுப்பது எந்த வகையிலும் அரமான செயல் அல்ல.

இவை அனைத்துக்கும் ஒரு தீர்வு உண்டு. அந்தத் தீர்வை இறைவன் தருவான் என்று நம்புவோமாக.

**வை.ஜெயமோகன் — கொக்குவில்**

**என்ன வியாசரே வலம்புரியுடன் சிலர் கைதாமே?**

வலம்புரி கிடைத்ததற்கரியது. ஆயிரம் சங்குகள் அடுக்கப்பட்டிருந்தாலும் அதில் உள்ள ஒரு வலம்புரி தனித்துவமாகத் தெரியவல்லது.

அதை விட வலம்புரி சங்கு விற்பனை செய்யவோ அனுமதியின்றி வைத்திருக்கவோ எவருக்கும் அதிகாரமும் இல்லை.

வலம்புரி சங்கு இல்லை என்றால் என்ன உங்கள் கைகளில் தானே நாளுக்கு நாள் புதுப் பொலிவுடன் உங்கள் வலம்புரி பத்திரிகை தவழ்கிறதே.

ஆதலால் அந்த வலம்புரி வேண்டாம். இந்த வலம்புரியை பயம் இன்றி பயன் படுத்துங்களேன்.

**தருஷ் — யாழ்ப்பாணம்**

**நிலையில்லாத மனித வாழ்வு பற்றிக் கூறுங்கள் வியாசரே?**

மிகக்குறுகிய வாழ்க்கைக் கொண்ட மனிதன் போடும் ஆட்டம் இருக்கிறதே அது கொஞ்சநஞ்சமல்ல.

நீ பெரிது நான் பெரிது என தமக்குள் தகுதி பார்த்து அந்தஸ்து பார்த்து பழகுவது.

என்னிடம் பணம் உண்டு, நீ ஏழை, நான் படித்திருக்கின்றேன், நீயோ படிக்காத முட்டாள் இவ்வாறு பாகுபாடு பார்த்து பகையை வளர்த்து இறுதியில் ஒரு பிடி சாம்பலாவதே மெய்.

ஆண்டியும் அங்கே அரசரும் அங்கே ஆவி போன பின் கூடுவார் இங்கே என்பது இதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம்: பலே பாண்டியா
இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடல்: கவியரசு கண்ணதாசன்
பாடியவர்: டி.எம்.சௌந்தரராஜன்.பி.சுசீலா



வாழ நினைத்தால் வாழலாம்
வழியா இல்லை பூமியில்
ஆழக் கடலும் சோலையாக
ஆசை இருந்தால் நீந்தி வா
வாழ நினைத்தால் வாழலாம்
வழியா இல்லை பூமியில்
ஆழக் கடலும் சோலையாக
ஆசை இருந்தால் நீந்தி வா
பார்க்கத் தெரிந்தால் பாதை தெரியும்
பார்த்து நடந்தால் பயணம் தொடரும்
பயணம் தொடர்ந்தால் கதவு திறக்கும்
கதவு திறந்தால் காட்சி கிடைக்கும்
காட்சி கிடைத்தால் கவலை தீரும்
கவலை தீர்ந்தால் வாழலாம்
வாழ நினைத்தால் வாழலாம்
வழியா இல்லை பூமியில்
ஆழக் கடலும் சோலையாக
ஆசை இருந்தால் நீந்தி வா
கண்ணில் தெரியும் வண்ணப் பறவை
கையில் கிடைத்தால் வாழலாம்
கருத்தில் வளரும் காதல் எண்ணம்
கனிந்து வந்தால் வாழலாம்
கன்னி இளமை என்னை அணைத்தால்
தன்னை மறந்தே வாழலாம்
வாழச் சொன்னால் வாழ்கிறேன்
மனமா இல்லை வாழ்வினில்
ஆழக் கடலில் தோணி போலே
அழைத்துச் சென்றால் வாழ்கிறேன்
ஏரிக் கரையில் மரங்கள் சாட்சி
ஏங்கித் தவிக்கும் இதயம் சாட்சி
துள்ளித் திரியும் மீன்கள் சாட்சி
துடித்து நிற்கும் இளமை சாட்சி
வாழும் காலம் முழுதும்
ஒருவராக வாழலாம்
வாழ நினைப்போம் வாழுவோம்
வழியா இல்லை பூமியில்
காதல் கடலில் தோணி போலே
காலம் முழுதும் நீந்துவோம்
வாழ நினைப்போம் வாழுவோம்
வழியா இல்லை பூமியில்
காதல் கடலில் தோணி போலே
காலம் முழுதும் நீந்துவோம்

# மீண்டெழுமா வெஸ்ட் இண்டீஸ்?

வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணியென்றால் ஒரு காலத்தில் படையே நடுங்கும். ஆஜானுபாகுவான உடலமைப்போடு இலக்கணங்களை உடைத்த தாறுமாறான ஆட்டத்தோடு கிரிக்கெட் உலகின் தனிக்காட்டு ராஜாவாக வலம் வந்த அணி அது. அப்படிப்பட்ட ஓர் அணியின் தற்போதைய நிலையைக் காண்கையில் தீரா சோகம் மட்டுமே மிஞ்சுகிறது. ஒரு காலத்தில் உலகக்கோப்பைகளை போகிற போக்கில் அசால்ட்டாக வென்றவர்கள், இன்று அந்த உலகக்கோப்பைத் தொடருக்கே தகுதிபெறாமல் வெளியே நிற்கின்றனர். ஜிம்பாப்வேயில் நடைபெற்ற உலகக்கோப்பைக்கான தகுதிச் சுற்று ஆட்டத்தில் அடி மேல் அடி வாங்கி உலகக்கோப்பைக்குத் தகுதிபெற முடியாமல் வெளியேறியிருக்கிறது அந்த அணி.

இந்தியாவில் விரைவில் நடைபெறவிருக்கும் உலகக்கோப்பைதான் கிரிக்கெட் வரலாற்றில் வெஸ்ட் இண்டீஸ் இல்லாமல் நடைபெறப்போகும் முதல் உலகக்கோப்பைத் தொடர்.

இங்கிலாந்தில் நடந்த முதல் உலகக்கோப்பைத் தொடரை வெஸ்ட் இண்டீஸ் வென்றதே ஓர் அரசியல் வெளிப்பாடாகத்தான் பார்க்கப்பட்டது. வெள்ளையின ஆதிக்கத்தால் ஒடுக்கப்பட்டு அடிமைகளாக நடத்தப்பட்ட ஒரு சமூகம், அந்த உலகக்கோப்பையில் தங்களை ஒடுக்கியவர்களையெல்லாம் வீழ்த்தி லார்ட்ஸின் பால்கனியில் உலகக்கோப்பையோடு கம்பீரமாக நின்றது. வெஸ்ட் இண்டீஸின் கிரிக்கெட் வரலாற்றை இந்தப் பின்னணியோடு சேர்த்துதான் நாம் அணுக வேண்டும்.

உரிமைகள் மறுக்கப்பட்டு ஆதிக்கசக்திகளால் ஒடுக்கப்பட்ட வரலாற்றைக் கொண்டதுதான் மேற்கிந்தியத் தீவுக் கூட்டங்கள். நாடானது, தீவுகளின் தொகுப்பாக இருந்ததால் ஆதிக்க சக்திகளிடமிருந்து விடுபட்ட பிறகுமே ஒரே நாடாக ஒன்றிணையும் உணர்வை அவர்களால் எட்டவே முடியவில்லை.

வெஸ்ட் இண்டீஸைத் தோற்கடித்து தங்கள் முன் மண்டியிடச் செய்வோம் எனக் கொக்கரித்த இங்கிலாந்து அணியை, க்ளைவ் லாயிட் தலைமையிலான வெஸ்ட் இண்டீஸ் அணிதான் மொத்தமாக காலி செய்தது. 1975 இல் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி உலகக்கோப்பையை வென்ற வெஸ்ட் இண்டீஸ் அணி 1979 இல், "கிரிக்கெட் உலகே தங்களுடையதுதான்" என சொந்தம் கொண்டாடிய இங்கிலாந்தைத் தோற்கடித்து உலகக்கோப்பையை வென்றது. அந்த 70களும் 80களும் கிரிக்கெட் உலகில் வெஸ்ட் இண்டீஸின் கொடி உயரப் பறந்த காலகட்டம். ஒருநாள் போட்டிகள் மட்டுமல்ல. டெஸ்ட் போட்டிகளிலுமே வெஸ்ட் இண்டீஸ்தான் வலுமிக்க அணியாக இருந்தது.


புயல்வேகப் பந்துவீச்சாளர்களுடன் எதிரணியின் மூக்கை உடைக்கும் பவுன்சர்களோடு, விவ் ரிச்சர்ட்ஸ் போன்ற அதிரடி பேட்டர்களோடு அந்த வெஸ்ட் இண்டீஸ் அணியே ஒரு மிரட்டல்பிம்பத்தோடுதான் காட்சியளித்தது.

27 டெஸ்ட் போட்டிகளில் தோல்வியையே தழுவாமல் தனி ராஜ்ஜியம் நடத்தியது. ஆனால், காலம் செல்லச்செல்ல அந்த வெஸ்ட் இண்டீஸ் அணியின் பொலிவுத்தன்மை மங்கத் தொடங்கியது. 1983 உலகக்கோப்பையில் இந்திய அணியிடம் வீழ்ந்து கோப்பையைப் பறிகொடுத்தது.

அதன்பிறகு, வெஸ்ட் அணிக்கு மொத்தமுமே சரிவுதான். ஒருநாள் உலகக் கோப்பையைப் பொறுத்தவரைக்கும் 1979 இற்குப் பிறகு அந்த அணி எந்தக் கோப்பையையும் வெல்லவில்லை. அதிக பட்சமாக, 1996 இல் இந்தியாவில் நடந்த உலகக் கோப்பையில் அரையிறுதி வரை முன்னேறியிருந்தனர். அதன்பிறகு, எந்தத் தொடரிலுமே காலிறுதியைக்கூட வெஸ்ட் இண்டீஸ் தாண்டவில்லை.

2000-த்தில் இருபது 20 கலாசாரம் தலையெடுக்கத் தொடங்கியது. அதிரடிக்குப் பெயர்போன வெஸ்ட் இண்டீஸ் அணி இயல்பிலேயே இந்த ஃபார்மட்டை தங்களுடையதாக மாற்றிக்கொண்டது. இருபது 20-இல் உலகக்கோப்பையை வெல்லும் வரை உயர்ந்தனர். ஆனால், இதிலுமே ஒரு சீரான தன்மை இல்லை. வீரர்களுக்கு முறையான சம்பளம் வழங்காமல் அவர்களின் கிரிக்கெட் அசோசியேஷன் இழுத்தடித்தது. அதனால் வீரர்களுமே தேசிய அணிக்காக ஆடாமல் ஐ.பி.எல் போன்ற தொடர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். ஐ.பி.எல் போன்ற தொடர்களில் முக்கியமான அணிகளின் வெற்றிக்கு வெஸ்ட் இண்டீஸ் வீரர்களே இன்றியமையாத பங்களிப்பை அளிப்பர். ஆனால், அப்படியான வீரர்களை தேசிய அணியில் அந்த அசோசியேஷன் தக்கவைத்துக்கொள்ளவே செய்யாது. இப்படி வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் வீழ்ந்து போனதற்கு எக்கச்சக்க காரணங்கள் இருக்கின்றன.


எட்டவே முடியாத வீழ்ச்சியை வெஸ்ட் இண்டீஸ் இப்போது எட்டியிருக்கிறது. தங்களின் பழைய கால வரலாற்றையும் எழுச்சியையும் மனதில் வைத்து வெஸ்ட் இண்டீஸ் இங்கிருந்து மீண்டு(ம்) வர வேண்டும் என்பதே, விளையாட்டை விளையாட்டாக மட்டுமே நினைத்து ரசிக்கும் உண்மையான ரசிகர்களின் எதிர்பார்ப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாணத்தில்

# கட்டட நிர்மாணம் அழகானவை ; ஆனால் அதன் ஆபத்து உணரப்படவில்லை



### பொறியியலாளர் சி.உருத்திரலிங்கம் உடனான நேர்காணல்

**ஏழாலையைத் தனது சொந்த ஊராகக் கொண்ட இவர் 1946 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி பிறந்தார்.தனது ஆரம்பக் கல்வியைக் கொழும்பு இந்துக் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் உயர்தரக் கல்வியினை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் கற்ற பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தில் பட்டப் படிப்பினை 1970 ஆம் ஆண்டு நிறைவு செய்தார்.**

**தனது பட்டப் படிப்பை பொறியியல் துறையில் முதலாம் தரத்தில் சிறப்பாகப் பெற்றுக் கொண்டு மகாவலி அபிவிருத்தி சபையில் தன்னை இணைத்துக் கொண்டார். பொல்கொல்லை, போவர்த்தனை ஆகிய திட்டங்களில் வடிவமைப்பு வேலைகளில் மிகுந்த அனுபவம் பெற்ற இவர் பொது நலவாய அமைப்பின் புலமைப்பரிசின் மூலம் இங்கிலாந்து சென்று லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் நிர் மாணத்துறையில் முதுமாணிப் பட்டத்தை முடித்துக் கொண்டார். இவர் நிர்மா ணத்துறை பற்றி வலம்புரிக்கு அளித்த நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.**

**தாங்கள் எம் மக்களுக்கு ஆற்றி வரும் சேவைகளைப் பற்றிக் கூற முடியுமா?**

• நிர்மாணத்துறையைத் தேர்ந் தெடுத்திருக்கும் அதேவேளையில் செலவுகளை குறைக்கக்கூடிய வித மாக அதற்கேற்ற தொழில்நுட்பங் களைப் பாவித்து கட்டடப் பொருட் களை மீள்பாவனைக்கு உட்படுத்தி தனியார் வேலைகளையும் ஒப்பந்த விதிகளுக்கமைவாக குறிக்கப்பட்ட காலத்திற்குள் முடித்துக் கொடுக்கும் வகையில் ரூலின்ஸ் என்ற நிறு வனத்தின் பெயரில் செய்து வரு கின்றேன்.

• வேலை வழங்குபவர்களுக்கும் நிர்மாணிப்பவர்களுக்கும் ஏற்படும் பிணக்குகளை நடுவர் முறையில் தீர்த்து வருகிறேன்.

• நிர்மாணத்துறையின் மேம் பாட்டினைக் கருத்திற் கொண்டு நிர் மாண மேம்பாட்டு மையம் என்னும் அரச சார்பற்ற நிறுவனத்தினை ஒரு வருடமாக நடத்தி வருகிறேன். இதன் மூலம். நிர்மாணத்திலேற்படும் பிரச் சினைகளுக்கு இலவசமாக ஆலோ சனை வழங்கி வருகிறேன்.

**எமது பிரதேசம் நிர்மாணத் துறையில் வளர்ச்சி அடைந்து ள்ளதா**

ஆம்.ஆனால் இல்லை எனலாம். நிர்மாணத்துறையின் பங்குதாரர் களாக உள்ளவர்கள் சகல விதத்திலும் அதீத வளர்ச்சி அடைந்தாலும் மேலெ ழுந்த ரீதியாக நோக்குகையில் கானல் நீராகவே தோற்றமளிக்கிறது எனலாம்.

**ஏன் அவ்வாறு கூறுகிறீர்கள்?**

வேறு எவ்விதம் கூறலாம். தூர நின்று பார்க்கையில் மெருகு ஊட்டிய திட்டங்களின் பிரசவங்களை பார்க்கிறோம். ஆஹா! என்ன அழகு. ஆனால் அவற்றின் பலாபலன்களை அண்மித்து பார்க்கையில் வளர்ச்சி பூஜ்ஜியமே ஆகும்.

அதாவது, தனியரர் நிர்மாணங்க ளில், பலவித இன்னல்களுக்கு மத்தி யில் ஏமாற்றப்பட்டவர்கள் கண்ணீர் சொரிய ஏமாற்றியவர்கள் களிப்பில் வீறுநடை போடுகிறார்கள்.தமிழ்த் தேசியம் பேசுபவர்களோ எமது மண்ணை வளர்க்காமல், பிற மண்ணை நேசித்து சோரம் போய் காலம் கடந்தும் ஞானம் பெறாமல் எமது நிர்மாண வளர்ச்சியின் தாமதத் திற்கு ஊக்கியாக விளங்குகிறார் கள்.

அரச ஒப்பந்தங்களிலோ வேலை வழங்குநர்களும் பொறியியலாளர்களும் நம்பிக்கை ஊட்டும் வார்த்தைகள் பேசி. நிர்மாணிகளை ஊக்குவித்து இலக்கை அடைந்ததும் நாட்டுப் பொருளாதாரப் பிரச்சினைகளை மேற்கோள்காட்டி. கையை விரித்து நிர்மாணிகளை நட்டாற்றில் விடுகின்றனர்.

அவர்கள் தம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகள் பல இருந்தும் தெரியாத் தன்மையினாலோ அல்லது கவனயீனத்தினாலோ அவற்றினை ஒப்பேற்றாமல். தமது வளர்ச்சியில் மட்டும் அக்கறை காட்டுகிறார்கள்.

**அப்படியானால் இவற்றினை சீர்செய்ய ஏதும் வழிகள் உள்ளனவா?**

வாழ நினைத்தால் வாழலாம்.வழியா இல்லை பூமியில்.

எமது பிரதேச நிர்மாண வளர்ச்சியில் முக்கிய பங்கெடுப்பது அரச நிர்மாண ங்களே.ஆகவே முதலில் அரச உயர் அதிகாரிகளும் அவர்களைத் தொடர்ந்து பொறியியலாளர்களும் மனம் வைத்தால் மேற்கிலும் சூரியன் உதிக்கலாம்.

**இதனை விளக்கமாகக் கூற முடியுமா?**

தாராளமாக. ஏற்கனவே அவற்றினை சாடைமாடையாக எம்மவர்கள் மத்தியில கூறப்போய் மொட்டை அடிபடாத நிலை யிலுள்ளேன். எனினும் உங்களுக்காகக் கூறுகிறேன்.

பொதுவாகக் கல்வி அறிவில் எம் மவர்கள் ஏனையோரிலும் சிறந்தவர்கள் என்பது சாதாரண வழக்கிலுள்ள பேச் சாகும்.அப்படியிருக்க. எமக்கிடையே யார் உசத்தி என்ற எண்ணம் சாதி பேசும் எம்மத்தியில் இருக்காதா?

சட்டங்களும் நீதி வழுவா நெறிமுறை களும் தங்களுக்கு மட்டும் தான் தெரியு மென்று தம்மைத் தாமே உயர்த்திக் கொண்டு கடமை புரியும் அரச உயர் அதிகாரிகள் ஒரு கடிதத்திற்கு எத்தனை நாளுக்குள் பதிலெழுத வேண்டுமென்பதை மறந்து விடுகிறார்கள். இவ்விளையாட்டு. நிர்மாணத் துறையினை வெகுவாகப் பாதித்துள்ளன.

திட்டமிடும் அதிகாரிகளோ தூரநோக் கின்றி செயற்படத் தெரியாமல். அரசியல் தலைகளின் மேல் பழியினைச் சுமத்தி தேவையில்லாத திட்டங்களை மேற் கொண்டு. ஈற்றில் அவற்றிற்கான செல வினை நிர்மாணிகளுக்கு வழங்க முடி யாமல் திண்டாடுவது நிர்மாணத்துறை யினை மறைமுகமாகத் தாக்குகிறது.

இவர்கள் தத்தம் பொறுப்பினை செய் தாலே போதும்.நம் மண்ணில் செல்வம் புரளும்.

கூட்டல், கழித்தல் தெரிந்த கணக்காளர் களோ நிர்மாண ஒப்பந்த விதிகளில் பரிச் சியமின்றி: காசேதான் கடவுளடா என்று வாழும் சில அதிகாரிகளையும் குழப்பி நிர்மாணத் துறையில் பாரிய தாக்க த்தினை உண்டாக்கிக் கொண்டேயிரு க்கிறார்கள்.

***இனி வருவோம் பொர்றியியலா ளர்கள் சந்நதிக்கு.***

இவர்கள் எனது சகோதரப் பிறவிகளே. நிர்மாணத்துறையின் 50வீத வளர்ச்சி இவர்கள் கையில் தான்.எனினும் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் "ப்ாவம்" தான்.

இளம் வட்டங்கள் நேர்மையாக செயற் பட முனைந்தாலும் ஆப்பு வைக்கப்படு கிறது. தமது அறிவினை வளப்படுத்த முனைந்தாலும் இவர்களின் மேலதி காரிகளின் விருப்பு-வெறுப்புகளுக்கமை வாகவே வளப்படுத்த முடியும். அப்படி யென்றால் எவ்விதம் நிர்மாணத்துறை வளர்ச்சியடைய முடியும்.

மேலும் வேலியே பயிரை மேயும் நிகழ்வுகளினால் நிர்மாண வளர்ச்சிக்கு குந்தகம் விளைவிக்கப்படுகிறது. தமது உறவுகளின் பெயரில் அரச அதிகாரிகளே நிர்மாணம் செய்தால். இத்துறை நிர் வாணம் அடையாதோ?

மன்னார் மாவட்டத்தில் ஒரு உயர் அரச அதிகாரியே நிர்மாணமும் செய்கிறார் என்று அறிய நேர்ந்தது. இது மிகவும் கவலையளிக்கிறது.ஆனால் இங்கு ஏராளம்.

எமது நாடு பொருளாதாரத்தில் அதல பாதாளத்தில் வீழ்ந்திருப்பதன் காரணமே அபிவிருத்தி என்ற மாயவார்த்தைகள் தான். இதனை உச்சரித்தாலே எமது மக்கள் பிரதிநிதிகள் தவிர, ஏனையோரின் மனதில் உடனேயே சீரியல்கள் (serial) ஓடத் தொடங்கும்.

எனினும் அண்மையில் தாம் செய்த மதிப்பீட்டுக்கு தாமே மதிப்பளித்து. அடிமட்ட எல்லையினை தாரக மந்திரமாகக் கணி த்து. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை புறந் தள்ளி வேலையினை வழங்க முன்வந்த பொறியியலாளர் ஒருவரின் துணிகரமான முடிவு போற்றுதற்குரியதே. இச்செயலானது இலை மறைகாய் போல. நிர்மாண வள்ர் ச்சிக்கு மிகவும் உறுதுணையாக அமை யும். ஏனையவர்கள் இவ் விதம் முன்வரு வார்களா?

தாம் தயாரித்த தமது மதிப்பீட்டிலேயே நம்பிக்கை இல்லாவிடில் ஊதியம் பெறுவதால் என்ன பயன்.அதேநேரத்தில் அனுபவமற்ற ஒரு பொறியியலாளரைப் பக டைக்காயாகப் பாவித்து பலவித முறை கேடுகளைத் தன்னகத்தே கொண்டு. தாம் முன் கூட்டியே தீர்மானித்தவர்களுக்கு கேள்வியினை வழங்கி நிர்மாணத் துறை க்கு கேடு விளைவித்து அதன் வளர்ச்சிக்கு ஊறு ஏற்படுத்திய அதிகாரிகளும் இருக்க த்தான் செய்கிறார்கள்.

**அழிவிலிருந்து காப்பாற்றப் பட்ட கட்டடங்கள் பற்றிக் கூறு ங்கள்?**

யாழ். மாவட்டத்தில் குறிப்பாக ஏனைய மாவட்டங்களில் பாதிக்க ப்பட்ட கட்டடங்களை அழிக்க விடாமல் புனருத்தாரணர்களுக்கு அறிவுரை வழங்கியமை.

யாழ்.நூலகத்தினை எமது அர சாங்கம் சுவடுகள் தெரியாமல் அழித்து புதிதாக நிர்மாணிக்க 1994 ஆம் ஆண்டு வந்த போது, அதனைப் புனருத்தாரணம் செய்யலாம் என்ற அறிக்கையினை அப்போதிருந்த நிர்வாகத்தினூடாக மேன்மை தாங்கிய ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருக்குச் சமர்ப்பித்து அதனைச் செய்தமை

யாழ்.பல்கலைக்கழகத்தின் பிரதான நீர்த்தாங்கியானது ஷெல் தாக்குதலினால் பாதிப்பு அடைந்து செயலிழந்திருந்த போது. அதனை சுவடுகள் தெரியாமல் அழித்து புதிதாக நிர்மாணிக்க முயற்சித்த போது. பல்கலைக்கழக உப வேந்தரின் வேண்டு கோளுக்கிணங்க. அதனைத் திருத்தி 1992 ஆம் ஆண்டு புனருத்தாரணம் செய்து கொடு த்தமை.

வீரசிங்கம் மண்டபத்தினை இடி க்கக்கூறிய அறிவுரையை மறுத்து பாதிக்கப்பட்ட தூண்களுக்கு முறிவு தெறிவு வைத்திய முறையில் திருத் துவதற்கு அறிவுரை வழங்கியமை.

கொழும்பு Millers Building இனை தகர்க்க முயற்சித்த போது NBRO இன் பணிப்புரைக்கமைய அதனைப் பார்வை யிட்டு தடுத்து நிறுத்தியமை.

100 வருடம் பழைமை வாய்ந்த அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை யின் ஒரு கட்டடத்தை பாதுகாத்து புனர மைத்தமை.

150 வருடம் பழைமை வாய்ந்த மாதா கோவிலொன்றினை இளவா லைப் பகுதியில் பாதுகாத்துப் புனர மைத்தமை.

ஆகிய பணிகளைச் செய்தத னூடாக பழம் பெரும் கட்டடங்களை பாதுகாத்துள்ளேன் என தனது கட்டட நிர்மாண்த்துறை அனுபவத்தை பகிர்ந்து கொண்டார் மூத்த பொறி யியலாளர் சி.உருத்திரலிங்கம்.

நேர்கண்டவர்-
ஜெயம் ஜெகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடும் விழிகள்



யாழ் நகர்தனிலே அமைந்துள்ளதாம்
அற்புதமான அறிவாலயமாம்
அனைவரையும் கவரும் படியான
ஏற்றத்திற்கான அறிவையூட்டுமே

கல்லூரி கல்வியோடு பல்துறை தேடலையும்
கற்சிதமாக பெற்றுக் கொள்ளலாமே
நேரம் கிடைக்கும் நேரமெல்லாமே
நேராய் சென்று பெற்றிடுவோமே

பாடசாலை மாணவர் வரை பற்பலரும் விரும்புவது
படிக்கத் தேவையான ஏடுகளும் உண்டல்லவா
நாளாந்த செய்திகளுடன் தாங்கி வரும் தினத்தாளே
திசையெங்கும் நடக்கும் நடப்புக்களை
படிக்கலாமே பலர் அறிந்திடுவாரே

நாம் வாழும் காலமதில் நல்லதொரு நூலகமாம்
நாமறிய சேவைதனை நாடு போற்றுமே
நல்லதொரு நிர்வாகி நின்று உன் சேவையால்
நாடறிய புகழ் சேர்க்கும் நல்லதொரு நூலகமாம்

எஸ்.பி.தனா, தெல்லிப்பழை.

# சிவபூமி மனவிருத்திப் பள்ளி சிறந்தோங்கி வளர்கவே!

மந்த புத்தியென்று
அருமந்த பிள்ளைகளை
சுமந்து பெற்றவரே
சுமையெனப் பூட்டி வைக்க...
அண்ணல் திருமுருகன்
அருளாலே வாழ வைக்கும்
சிவபூமி மனவிருத்திப் பள்ளி
சீராக நாளும் வளர்கவே!

வந்து பிறந்தாலும்
வாழத் தெரியாதோர்
வெந்து போகாமல்
முந்த வழி தருகவே!

கோண்டாவில் பதியினிலே
அமரர் சிவாஜி அடிக்கல்லிட
செல்வி தங்கம்மா
திறந்து வைத்த பள்ளி இது!

ஆராதனை அனுதினமும்!
தியானம் உடற்பயிற்சி தொடர..
ஒலிம்பிக் போட்டி வரை
ஒலித்தது ஒளித்தோர் புகழ்!

தொழிற்பயிற்சி விவசாயம்
எழுச்சி மிகு வாழ்வுதர
ஆண்டுகள் இருபது
நீண்டு நிலை பெற்ற
சிவபூமி மனவிருத்திப் பள்ளி
தாங்குக தங்கமாம் சிறுவர்களை

இரா.ஜெயக்குமார்

# என் தனிமையும் ஏசுவும் நானும்



யேசுவும் நானும்
என்றும் உன்னுடன்
நிசி கண்டும்
நீளும் பிரார்த்தனை

நான்கு சுவர்களுள்
நான் காணும் பிரார்த்தனை
வென்று தரும்
இன்றைய இனப் பிரச்சினையை
காவல்துறை போடும்
கொடுமையான தன்மை
ஏவல் பேய்களை
யேசுவிடம் அர்ப்பணம்

நாட்டுச் சேதிகள்
நன்றகலா இருக்கிறது
வீட்டுள் இருந்து
வேண்டுவேன் இயேசுவை

உடம்பு அலுத்து
உழுத்துக் கிடக்கும்
உடனே இயேசுவின்
உயிர்ப்பான ஆமேன்

சிவா, தும்பலை.

## மௌனத்தின் தேடல்- 677



# அகலாத வேலிகள்

விடுவிக்கப்பட்டவர்
என்பதை நம்பி
சிறகு விரித்து தவிப்புடன்
வழிதிறந்து பார்த்தோம்
சிறகு மூடிக் கொண்டது
விழியும் மனமும் ஏக்கமுற்றன
அகலாத வேலிக்ள்
தடுப்பாய் எம்முன்னே
இன்னும்... இன்னும்...

சி.இ.அன்புதுரை. சம்மட்டியோலை. மானிப்பாய்.

# காணியும் காரணியும்

அன்னை பராசக்தியிடம்
காணி நிலம் வேண்டிட
மகாகவிப் பாரதியும் பக்தியுடன்
பரவசமாகி பாமாலை பாடினார்
பூமித்தாயின் பெருமையைப்
புனிதமாகப் போற்றிப் புகழ்ந்தார்
வாழ்வாங்கு வாழ வைத்த
வளமான நிலப்பரப்புக்களை
பறிகொடுத்துப் பரிதவிக்கும்
வறிய குடும்பங்களின் சோக
நிலையை உலகு உணரும் போது
மனிதாபிமானமும் தலைநிமிரும்

க.நாகராசா. நுணாவில்.

# நீதிக்கு நிந்திப்பா?

தார்மீகம்
தலைகீழானதோ?
தலைக்கணம் பெரிதாக
போதிமாதவன்
போதனை புனிதம்
போற்றுதலே
தூற்றுதல் அல்ல
தீச்சுட்ட புண் ஆறும்
நாச்சுட்ட வடு மாறாது
நீதிக்குக் குழி தோண்டல்
நீதி நிலைக்குமா
நீதிக்கு நிந்திப்பா?
நிலமே நீ கேள்!
உறைவிடம் நீ...
உணர்வாரோ
உன்னிடம் சேர்வோர்?

தமிழினியன். வவுனியா.

## மௌனத்தின் தேடல்- 678



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
ஈனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# ஆக்கிரமிப்பு

அப்பாவி மக்களின் நிலத்தை
ஆக்கிரமிப்பு செய்த காலம் தான் எவ்வளவோ?
முட்கம்பி வேலிக்குள்ளே உள்ளடக்கி
மூபத்து வருடங்களுக்கு மேலாகி விட்டதே
எம்மைப் பெற்றவரின் சொந்த நிலத்தை
எம் பிள்ளைகளிற்கு காட்டும் காலம் வந்தும் கூட
காணிகளை விடுதலை செய்யாமையின் மாயம் என்ன?
காணிகளை விடுதலை செய் விடுதலை செய் என்ற
வீரக்குரல் உன் காதில் கேட்கவில்லையோ?
விரைவாக எம் நிலத்தை எமக்கே தந்துவிடு
சொந்த நிலத்தில் நாம்
சந்தோசமாக வாழ வழி விடு

ஆ.செல்வி, திருநாவலூர்.

# உரிமைக்காக!

அடக்குமுறையால் ஆளப்பட்டு
அடைக்கப்பட்ட சிறுவர்களே!
முட்கம்பி வேலிகளின்
முடிவிடம் நீளலாம்- ஆயினும்
அநீதி இதுவென்று -நீங்கள்
அணிதிரண்டெழுந்தால் -நாளை
உலகின் கண்கள் திறக்கப்பட்டு
உங்களின் உரிமை காக்கப்படலாம்!

சாந்தையூர் வினிஸ், பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காலத்தின் பதிவு 69

# கடல்புறா

## அவள் அறிந்த இரகசியம்

உனக்கு அவன் தகுதியல்லவென்று எனக்குத் தோன்றியிருக்கும் பட்சத்தில், உன் ரத்தத்துக்கு இணையான ரத்தம் அவன் உடலில் பாயவில்லையென நான் கருதும் பட்சத்தில் அகூதாவினால் அந்த அக்ஷயமுனைக் கோட்டம் அழிந்து போவதானாலும் இளையபல்லவன் உன்னை அணுகக்கூட விட மாட்டேன்.

நீண்ட யோசனைக்குப் பிறகே உன்னை இளையபல்லவனுக்குக் கொடுப்பதில் தவறில்லையெனத் தீர்மானித்தேன். பிற்காலத்தில் ஒருவேளை உன் பிறவி மர்மம் வெளிப்பட்டாலும் உன் திருமணத்தை யாரும் ஆட்சேபிக்க முடியாது . நீ அவனை மணப்பதால் உன் விருப்பம் பூர்த்தியாவது மட்டுமல்ல, அக்ஷயமுனைக்குப் பூர்வக் குடிகளால் ஏற்படும் ஆபத்து சமாளிக்கப்படுவது மட்டுமல்ல, ஸ்ரீவிஜய சாம்ராஜ்யத்துக்கும் பெரும் பலன் ஏற்படும்” என்றான் பலவர்மன்.

“ஸ்ரீவிஜய சாம்ராஜ்யத்துக்கு என்ன பலன் ஏற்படும்?” என்று வினவினாள் மஞ்சளழகி.

“பெரும் படைத்தலைவன் ஒருவன், அதுவும் தற்சமயம் கடற்படைப் போரில் வல்லவனொருவன் சோழர்களிடமிருந்து ஸ்ரீவிஜயத்திடம் இழுக்கப்படுவான்.” என்றான் பலவர்மன்.

“இழுபட அவர் இஷ்டப்படா விட்டால்?”

“நீ கிடைக்கமாட்டய் அவனுக்கு.”

“அதை அவர் பொருட்படுத்தா விட்டால்?”

பலவர்மனின் இதழ்களில் புன் முறுவல் தாண்டவமாடியது. “மனிதனை அறியும் சக்தி ஓரளவு உன் தந்தைக்கு உண்டு மகளே! ஆடலில் உன் கை நீட்டுக்கு இழுபட்ட அந்த ஆடவன் நீ நினைத்தபடி ஆடுவான் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. கரும்பு தின்னக் கூலியா என்று ஒரு தமிழ்ப் பழமொழி உண்டு,” என்று சுட்டிக் காட்டினான் பலவர்மன்.

“உண்டு” என்றாள் மஞ்சளழகி சங்கடத்துடன்.

“கரும்பும் தருகிறேன், கூலியும் தருகிறேன். கசக்கிறதா அவனுக்கு?”

“கூலியா?”

“ஆம் நீ கரும்பு அக்ஷயமுனைக் கோட்டையில் எனக்கு அடுத்த பதவி யாருக்கும் எளிதில் கிட்டாத பெரும் பதவி அதையே கூலியாக அளிக்கிறேன்.”

“இரண்டையுமே அவர் வெறுத்தால்?”

பலவர்மன் சிறிது நேரம் பதிலேதும் சொல்லவில்லை. ஏதோ யோசித்துவிட்டுச் சொன்னான். “வெறுக்காமலிருக்கும்படி பார்த்துக் கொள்வது என் பொறுப்பு” என்று.

“என் பொறுப்பா!” அவள். கேள்வியில் வியப்பு மண்டிக் கிடந்தது.

“ஆம்”

“என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?”

மீண்டும் ஒரு தந்தை மகளிடம் பேசக்கூடாத வார்த்தைகளைப் பேசச் சொல்கிறாய் மகளே! பேச இஷ்டமில்லை எனக்கு ஆனால் கடமையை முன்னிட்டுப் பேசுகிறேன். வண்டை வசீகரிக்கும் முறையை மலருக்கு யாரும் சொல்லித் தருவதில்லை. மனத்தை ஒருவனிடம் பறிகொடுத்த கற்புடைய மகளிற்கு அவனை மணாளனாக அடைவதற்கான அவசியத்தையும் யாரும் புகட்டுவது இல்லை” என்று கூறிவிட்டு அதற்கு மேல் அங்கிருக்க இஷ்டமில்லாமல் எழுந்திருந்து விடுவிடுவென அந்த அறையை விட்டு வெளியேறினான் பலவர்மன். (தொடரும்)


---

# நான் வைரமுத்து பேசுகிறேன்... 15

ஒரு கவிஞன் எப்போதும் தன் சுய பலம் சொல்லிக் காட்ட ஆசைப்பட மாட்டான்.

ஆனால், சூழும் சக்திகள் அவனைச் சொல்ல வைக்கும்.

உலகப் புதுக் கவிதையின் பிதா மகனான வால்ட் விட்மனின் கட்டற்ற கவிதைகளின் மேல் கண்டனக் கணைகள் பாய்ச்சப்பட்டபோது “இப்போது நான் அறிவுப் பிழம்பாக இருக்கிறேன். வேண்டுமானால்



எனக்கு பாடம் கற்பித்தவர்கள் இப்போது என்னிடம் பாடம் கற்றுக் கொண்டு போகட்டும்” என்று அக்கினி வார்த்தைகளால் அறிவித்தான்.

“கவியரசர் தமிழ் நாட்டுக்கில்லையென்னும் வசை என்னால் கழிந்தன்றே” என்று மகாகவி பாரதிகூடப் பூமியை நோக்கித் தன் அறிக்கையை வானத்தில் நின்று கொண்டு வாசித்தான்.

சொல்ல விரும்பாதவனைச் சொல்ல வைக்கின்றன சூழல்கள்.

கண்ணதாசனுக்கும் அப்படி அறிவிக்க வேண்டிய கட்டாயம் அடிக்கடி நேர்ந்ததுண்டு.

**“கவியத் தாயின் இளையமகன்**
**காதல் பெண்களின் பெருந்தலைவன்**
**பாமா ஜாதியின் தனி மனிதன் – நான்**
**படைப்பதனால் என் பேர் இறைவன்”**

என்று இந்தப் பிரபஞ்சத்தை நோக்கிப் பிரகடனப் படுத்தியவர்!

**“மானிட இனத்தை ஆட்டி வைப்பேன் – அவர்**
**மாண்டு விட்டால் அதைப் பாடி வைப்பேன் – நான்**
**நிரந்தரமானவன் அழிவதில்லை – எந்த**
**நிலையிலும் எனக்கு மரணம் இல்லை”**

என்று ஆன்மாவின் குரலால் அறிவிக்கிறார்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் தான் வாழ்ந்த காலத்திலேயே இத்தனை ஜனங்களின் இதயங்களோடு பேசிக் கொண்டிருந்த கவிஞர் இவராக மட்டுமே இருக்க முடியும்.

கண்ணதாசன் கருத்துலகத்திற்குக் கொடுத்த காணிக்கைகள் என்னவென்பதைக் காலம்தான் நிர்ணயம் செய்ய வேண்டும்.

## எனது பார்வையில் கண்ணதாசன்

கண்ணதாசனைப் பொறுத்த வரையில் யாப்பிலக்கணத்தால் மட்டும் அவர் மரபுக் கவிஞரில்லை.

உள்ளீடுகளால், உணர்த்த நினைத்த விடயங்களால் காலங்காலமாய் இந்த மண்ணில் வேரோடிக் கிடக்கும் பழைய கருத்துக்களைப் பாதுகாக்கும் முனைப்பால் அவர் முழுக்க முழுக்க ஒரு மரபுக் கவிஞரே.

ஆனால், அவரது உரைநடையிலிருந்த தெளிவும், வலிவும் கவிதைகளிலிருந்த ஓட்டமும், எத்தியும் அவருடைய முன்னோடிகளையெல்லாம் முந்தப் பார்த்தன என்ற உண்மையை விமர்சகர்கள் ஒளித்துவிடக்கூடாது.

அவர் ஒரு மரபுக் கவிஞர் என்ற போதிலும், அத்தனை யாப்பு வடிவங்களையும் ஆண்டு பார்த்திருக்கிறார் என்று சொல்லிவிட முடியாது.

கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களும் கொச்சகக் கலிகளும், கண்ணிகளுமே அவருடை காதலுக்குரிய வடிவங்களாய்த் திகழ்ந்தன.

கவிதைப் பயனுக்காக யாப்பிலக்கணத்தை அடிக்கடி வளைத்துக் கொள்வதில் அவர் அக்கறை காட்டினார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

358

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## அதிகரித்து வரும் புற்றுநோய்த் தாக்கத்திலிருந்து எம்மைப் பாதுகாக்க

மருத்துவ உலகில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப விருத்தியானது மனிதனது ஆயுள் எதிர்பார்ப்பில் அதிகளவு நீட்சியினை ஏற்படுத்தியிருப்பினும் தற்காலத்தில் உயிர்க் கொல்லி நோய்களுடனான மனிதனது போராட்டங்கள் அதிகரித்து வரும் போக்கினையே காணக்கூடியதாகவுள்ளது.

இத்தகைய உயிர்க்கொல்லி நோய்களில் புற்றுநோயானது முக்கியமான ஒன்றாகக் காணப்படுவதுடன், இந் நோய்த்தாக்கமானது உலகெங்கும் பல்வேறு வயதுப்பிரிவினரிடையே அதிகரித்துவரும் போக்கினை அவதானிக்கலாம். இலங்கை இதற்கு விதிவிலக்கானதல்ல.

புற்றுநோயானது அண்மைக்கால வரலாற்றினைக்கொண்ட ஒரு நோயல்ல. இது கி.மு 2250களில் காணப்பட்டிருப்பதற்கான அடையாளங்கள் எகிப்திய பிரமிட்டுக்களிலிருந்து எடுக்கப்பட்ட மனித உடல்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து வெளியாகியுள்ளது.

புற்றுநோய் எவ்வயதுப் பிரிவினரையும் தாக்கலாம். எத்தகைய வாழ்க்கைத்தர நிலையிலுள்ளவர்களையும் தாக்கலாம். ஆயினும் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வின்மையே இந் நோய்த் தாக்கத்திலான அதிகரித்து வரும் இறப்புக்களுக்குக் காரணமாக அமைகின்றது. இத்தகைய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது இன்றைய நிலையில் மிகவும் முக்கியமானது.

புற்றுநோய் ஏற்படுவதற்கு பல்வேறு காரணிகள் காரணமாக அமையலாம். இக்காரணிகளை பௌதீக, இரசாயன, உயிரியல் மற்றும் பரம்பரை அலகு காரணிகள் என வகைப்படுத்துவர். பௌதீக காரணிகளில் சூரியக்கதிர்கள் மற்றும் UV கதிர்களிலான தாக்கம் முக்கியமானது.

இரசாயன காரணிகளில் சிகரெட், பீடி, சுருட்டு முதலானவற்றிலுள்ள நச்சுப்பதார்த்தங்கள், மதுபானம், வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை முதலானவை முக்கியமானவை.


உயிரியல் காரணிகளில் Human Papillomo virus, (HPV) வைரஸ்கள் மற்றும் எப்ஸ்டீன் பார் வைரஸ் (Ebstain Bra Virus), எயிட்ஸ் வைரஸ் (HIV) போன்ற வைரஸ்களின் தாக்கம் முக்கியமானது.

இவற்றில் HPV வைரஸானது கர்ப்பப்பை கழுத்து புற்றுநோய்க்குக் காரணமாக அமைவதுடன் இவ் வைரஸ்கள் முறைகேடான பாலியல் தொடர்புகளினால் கடத்தப்படுகின்றன.

புற்றுநோய்களை ஏற்படுத்தும் காரணிகளில் சில மனிதனால் கட்டுப்படுத்தக்கூடியனவாகவும் சில கட்டுப்படுத்த முடியாதனவாகவும் காணப்படுகின்றன. கட்டுப்படுத்தக்கூடிய சில காரணிகளாகப் பின்வருவனவற்றைக் கருதலாம்.

புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல், முறைகேடான பாலியல் தொடர்புகள், வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை பாவனை இவை மனிதனால் கட்டுப்படுத்த இயலுமான காரணிகளாகக் காணப்படுவதனால் இத்தகைய பழக்க வழக்கங்களைத் தவிர்ப்பதன் மூலம் இவை ஏற்படுத்தும் புற்றுநோய் தாக்கத்திலிருந்து எம்மைப்பாதுகாக்க முடியும்.

உதாரணமாக புகைப்பிடித்தலினால் மூக்கு, வாய்க்குழி, குரல்வளை தொண்டை, களம், நுரையீரல், ஈரல், சதையம், வயிறு, சிறுநீரகம், சிறுநீர்ப்பை, பெருங்குடல், சூலகம், கர்ப்பப்பைக்கழுத்து, எலும்பு மச்சை முதலான அவயவங்களில் புற்றுநோய்த்தாக்கம் ஏற்படலாம்.



மதுப் பாவனையால் வாய், தொண்டை, குரல் வளை, களம், ஈரல், மலக்குடல் மற்றும் மார்பகம் முதலிய அவயவங்களில் புற்றுநோய்த்தாக்கம் ஏற்படலாம். வெற்றிலை,பாக்கு மற்றும் சுண்ணாம்பு பாவனையால் வாய் மற்றும் களப் பகுதிகளில் புற்றுநோய்த்தாக்கம் ஏற்படலாம்.

இலங்கையின் வடமாகாணத்தில் அதிகரித்து வரும் புற்றுநோய்த் தாக்கமானது முறையே வாய், தொண்டைக்குழி, மார்பகம், தைரொயிட் சுரப்பி, கர்ப்பப்பைக் கழுத்து, பெருங்குடல், நுரையீரல் முதலானவை தொடர்பாகக் காணப்படுகின்றது.

ஆயினும் புற்றுநோய்க்கான ஆரம்ப நிலையிலான அடையாளங்கள் பற்றி அவதானமாக இருந்தால் நோயினை ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்தலாம். அதாவது வாய்ப்புற்று நோயைப் பொறுத்தவரையில் வாயில் ஏதேனும் அசாதாரண வளர்ச்சி காணப்படுமிடத்து அது எத்தகைய நோவினையும் ஏற்படுத்தாத பட்சத்திலும் மருத்துவ ஆலோசனையினை உடனடியாக நாடுவது நோயினை ஆரம்ப நிலையிலே கட்டுப்படுத்த வழிவகுக்கும்.

இதற்கு கண்ணாடியின் முன்னின்று வாயினை அடிக்கடி பரிசோதிப்பது அவசியமானது. இதுபோல மார்பகப்புற்று நோயினை மார்பிலுள்ள கட்டிகள், முலைக்காம்பினூடாக நீர் வடிதல், குழி விழுங்குதல், உள்ளிழுக்கப்பட்ட முலைக் காம்பு, தோலில் ஏற்படும் மாற்றங்கள் முதலான அறிகுறிகளால் அடையாளப்படுத்தலாம். குறிப்பாக 45 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் மார்பகப்புற்று நோய்க்கான திரையிடலை இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒரு தடவையேனும் மமோகிராம் முறைமூலம் மார்பகப்புற்று நோயினை அறிகுறிகளே இல்லா ஆரம்பநிலையில் கண்டுபிடிக்கலாம்.

ஆயினும் இலங்கையின் அரச மருத்துவமனைகளில் எத்தகைய சேவைகள் புற்றுநோய்க்கான அறிகுறிகள் அல்லாத குறித்த வயதுப்பிரிவு சார் அனைத்துப் பெண்களுக்கும் இன்னமும் வழங்கப்பட முடியாத நிலை உள்ளதால் 20 வயதிற்கு மேற்பட்ட அனைத்துப்பெண்களும் மாதமொரு தடவையேனும் சுயமார்பகப் பரிசோதனையை மேற்கொள்வதன் மூலம் நோயின் அறிகுறிகள் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து பொருத்தமான சிகிச்சை மூலம் நோயைக் குணமாக்கலாம்.

இதுபோலவே கர்ப்பப்பை கழுத்து புற்றுநோயானது மாதவிலக்கு நின்ற பின்னான உதிரப்போக்கு, மாத விலக்கின் போதான கடும் உதிரப்போக்கு மற்றும் துர்நாற்றமான திரவப்போக்கு முதலான அறிகுறிகளால் அடையாளப் படுத்தப்படலாம். இப்புற்று நோய்க்கான திரையிடல் பரிசோதனை PAPsmear எனப்படும் இச் சேவையானது இலங்கையில் ஒருசில அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளிலேயே பெறப்படலாம்.

இதற்கு மாற்றீடான வேறு திரையிடல் பரிசோதனை முறைகள் மூலம் கர்ப்பப்பை கழுத்து புற்றுநோயினை அடையாளப்படுத்தும் முறையானது தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது வருங்காலத்தில் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும். மேலே கூறப்பட்டது போல ஏனைய புற்றுநோய்களுக்கு ஆரம்ப அறிகுறிகள் உள்ளன. களப்புற்று நோய்க்கு அறிகுறியாக உணவு விழுங்குவதில் சிரமங்கள் அமையலாம். குடல் மற்றும் குதப்புற்றுநோய்களுக்கு மலச்சிக்கல், மலத்துடன் இரத்தம் வெளியேறுதல், மலம் தார் போன்ற கரிய நிறத்துடன் காணப்படல், குருதிச் சோகை மற்றும் வயிற்று வலி முதலானவை அறிகுறிகளாக அமையலாம்.

ஆயினும் பொதுவாகக் கூறுமிடத்து மேற்கூறிய அறிகுறிகள் தவிர்ந்து வேறு அறிகுறிகள் அதாவது பசியின்மை, காரணமற்ற உடல் எடை குறைவு, தொடர்ச்சியான காய்ச்சல், வீக்கங்கள் அல்லது கட்டிகள், தொடர்ச்சியான இருமல், சளியுடனான இரத்தப் போக்கு மற்றும் அதிகாலையில் ஏற்படும் தலை வலி முதலான அறிகுறிகள் இரண்டு வாரங்களுக்கு மேலாக நீடித்தால் மருத்துவ ஆலோசனை பெறப்பட வேண்டும். ஏனெனில் இவையும் புற்றுநோய்க்கான ஆரம்ப அறிகுறிகளாக அமையலாம்.

தற்காலத்தில் அதிகரித்து வரும் புற்றுநோயானது ஒரு சாபக்கேடான வியாதியோ அல்லது சரும வியாதியோ அல்ல. ஆகவே புற்றுநோயிலிருந்து எம்மை பாதுகாப்பது எமது தலையாயக் கடமையாக அமைவதுடன் புற்று நோயினால் பாதிக்கப்படுபவர்களுக்கு ஒரு சமூகமாக எம்மாலியன்ற அனுசரணையை வழங்குவது இச் சமூகம் சார்பான ஒவ்வொருவருக்குமுரியதுமான அழைப்பாகும்.

நாம் எமது சமூகத்திடம் வேண்டிக்கொள்வது பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுசரணை வழங்குவோம். நோயுடன போராடிக் குணமானவர்களை மெச்சுவோம். நோயினால் மரித்தவர்களைக் கனம் பண்ணுவோம்.

**மருத்துவ கலாநிதி**
**கிரிசாந்தி இராஜசூரியர்**
**விசேட புற்றுநோய்**
**மருத்துவ நிபுணர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பில் மக்களுக்கு போதிய தெளிவில்லை

## யாழ். அரச அதிபர்

**(யாழ்ப்பாணம்)**

**ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பாக எமது மக்களுக்கு போதிய விளக்கமில்லாத நிலையுள்ளது என யாழ். மாவட்ட அரச அதிபர அ. சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.**



2030ஆம் ஆண்டில் சர்வதேச தரத்திலான மாணவர்களை உருவாக்கும் வகையில் இலங்கையின் பல்கலைக்கழக கல்வி முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என்றும் உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் வகையில் உயர் கல்வி பாடத்திட்டத்தை மேம்படுத்தும் திட்டம் அறிமுகப்படுத்தப் படும்உயர்கல்வியை தொடர விரும்பும் ஒவ்வொரு மாணவருக்கும் உயர்கல்வி வழங்குவது அரசின் பொறுப்பு.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தரத்திற்கு உள்ளூர் பல்கலைக்கழகங்களை தரமுயர்த்த வேண்டும் என்பதுடன், 2030ஆம் ஆண்டளவில் பிராந்தியத்தில் சிறந்த பல்கலைக்கழகங்களாக இலங்கைப் பல்கலைக்கழகங்களை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, சர்வதேச பல்கலைக்கழகங்கள் சிலவற்றை இலங்கையில் திறப்பதற்கான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும், முதற்கட்டமாக இரண்டு அல்லது மூன்று பல்கலைக்கழகங்களை திறக்க எதிர்பார்க்கப்படுகிறது. (4-104)

# சர்வதேச தரத்திற்கு ஏற்ற வகையில் பல்கலைக் கல்வி முறையில் மாற்றம்

## உயர்கல்வி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

2030 ஆம் ஆண்டில் சர்வதேச தரத்திலான மாணவர்களை உருவாக்கும் வகையில் இலங்கையின் பல்கலைக்கழக கல்வி முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என்றும் உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் வகையில் உயர்கல்வி பாடத்திட்டத்தை மேம்படுத்தும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் உயர்கல்வியை தொடர விரும்பும் ஒவ்வொரு மாணவருக்கும் உயர்கல்வி வழங்குவது அரசின் பொறுப்பு. ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தரத்திற்கு உள்ளூர் பல்கலைக்கழகங்களை தரமுயர்த்த வேண்டும் என்பதுடன் 2030ஆம் ஆண்டளவில் பிராந்தியத்தில் சிறந்த பல்கலைக்கழகங்களாக இலங்கைப் பல்கலைக்கழகங்களை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். இதேவேளை, சர்வதேச பல்கலைக்கழகங்கள் சிலவற்றை இலங்கையில் திறப்பதற்கான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் முதற்கட்டமாக இரண்டு அல்லது மூன்று பல்கலைக்கழகங்களை திறக்க எதிர்பார்க்கப்படுகிறது எனவும் தெரிவித்தார் (4)


# யாழ்ப்பாணம் மாநகர சபை

## நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2023

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும்.

- கேள்விப்படிவக் கட்டணம் :- **ரூபா 1,000.00 + Vat 15%**
- கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி :- **17.07.2023 தொடக்கம் 31.07.2023 (ஞாயிற்றுக். கிழமை தவிர்ந்த நாட்களில் மு.ப 9.00 - பி.ப 2.30 மணி வரை)**
- கேள்விப்படிவம் விநியோகிக்கும் இறுதித் திகதி :- **31.07.2023 பி.ப 12.30 மணி வரை**
- கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் :- **01.08.2023 முற்பகல் 10.00 மணி வரை**
- கேள்விப்படிவம் திறத்தல் :- **01.08.2023 முற்பகல் 10.00 மணிக்கு**
- தற்காலிக கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் :- **ரூபா 2,000.00**

விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு நானாவித இறைவரி பகுதியில் வைக்கப்படும் கேள்விப்பெட்டியினுள் 01.08.2023 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமூகமளித்தல் வேண்டும். கேள்வியில் சித்தி பெற்றவர்கள் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகர சபை நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(c-6921)


# திடீர் சுற்றிவளைப்பு ஐஸுடன் மூவர் கைது

(கொழும்பு)

வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய வத்தளை, குடா தண்டாவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து 217 கிராம் ஐஸ் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

கைதானவர்கள் 26, 32 மற்றும் 36 வயதுடையவர்கள் எனவும் அவர்கள் ஹெந்தலை மற்றும் வத்தளை பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் வெலிசர நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை 7 நாட்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.(4)

# 2 வருடங்களாக விசா இன்றி யாழில் தங்கியிருந்த இந்தியப் பிரஜை கைது

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து விசா இன்றி 2 வருடங்களாக வாழ்ந்து வந்த தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒருவரை மட்டக்களப்பு நகரில் சந்தேகத்திற்கு இடமாக நடமாடிய நிலையில் நேற்று கைது செய்துள்ளதாக மட்டு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

2021 ஆம் ஆண்டு சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்த நிலையில் யாழ்ப்பாணம் கைலாசர்பிள்ளையர் கோவில் பகுதியில் தங்கிருந்துள்ளார்.

இவர் சம்பவதினமான நேற்று சனிக்கிழமை மட்டக்களப்பு நகர்பகுதியில் மட்டக்களப்பைச் சேர்ந்த நண்பர் ஒருவருடன் சத்தேகத்திற்கு இடமாக நடமாடிய நிலையில் இருவரையும் கைது செய்து விசாரணையின் போது விசா இன்றி கடந்த 2 வருடங்களாக தங்கி இருப்பது தெரிய வந்துள்ளது.

இதில் கைது செய்யப்பட்டவரகளை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4)

# எரிபொருள் விநியோகத்தை ஆரம்பித்த சீனாவின் சினோபெக் நிறுவனம்


(கொழும்பு)

சீனாவின் சினோபெக் நிறுவனம் நேற்று முதல் இலங்கையில் எரிபொருளை இறக்குமதி செய்து விநியோகிக்க ஆரம்பித்துள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

குறித்த நிறுவனம் நாட்டில் 50 புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களையும் திறக்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சினோபெக் எனர்ஜி லங்கா பிரைவட் லிமிடெட் இலங்கை முதலீட்டுச் சபையுடன் எரிபொருள் விநியோகத்திற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் எரிபொருள் நிலையங்களை அமைப்பதற்கும் விநியோகிப்பதற்கும் 100 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டை மேற்கொள்வதற்கான ஒப்பந்தமே இவ்வாறு கைச்சாத்திடப்பட்டுள்ளது. (4)



கரவெட்டி, கப்பூது, மேற்கு மாது வெள்ளத் தடுப்பணை மேம்படுத்தல் திட்டத்திற்கான வேலைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த அபிவிருத்தி வேலைத்திட்டம், ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ திட்டத்தின் கீழ், உலக வங்கியின் சுமார் 48 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படம்- மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைமையான மொழி தமிழ் மொழியே!

## பிரான்ஸில் பிரதமர் மோடி



உலகின் மிகவும் பழைமையான மொழி 'தமிழ் மொழி' என்றும் பிரான்சில் விரைவில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்படும் எனவும் இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பிரான்ஸின் தேசிய தினம்நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டுவரும் நிலையில் அந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வதற்காக இந்தியப் பிரதமர் மோடி நேற்று பிரான்ஸ் சென்றிருந்தார்.

இந்நிலையில் இவ் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த உரையில் அவர் தெரிவித்ததாவது, உலகின் பழ்மையான மொழி தமிழ். உலகின் மிகப் பழைமையான மொழி இந்திய மொழி என்பதில் மிகப் பெரிய பெருமை எமக்கு உண்டு. பிரான்ஸ் நாட்டில் இந்தியாவின் சார்பாக திருவள்ளுவர் சிலை அமைக்கப்படும்.

பிரான்ஸில் திருவள்ளுவர் சிலையை அமைப்பது இந்தியாவுக்கு கிடைத்த பெருமை. 100 ஆண்டுகளுக்கு முன்பு, பிரான்சுக்கான யுத்தத்தில் இந்திய வீரர்கள் ஈடுபட்டனர். பிரெஞ்சு மண்ணில் நிகழ்ந்த யுத்தத்தில் பங்கேற்று பிரெஞ்சு மண்ணில் இந்திய வீரர்கள் வீரமரணம் அடைந்தனர்.அத்துடன் இந்தியா தற்போது G20 கூட்டமைப்பின் தலைமைத்துவ பாத்திரம் வகிக்கிறது.

பருவநிலை மாற்றம், தீவிரவாதம் அல்லது தீவிரவாத எதிர்ப்பு என எதுவாக இருந்தாலும், உலகம் இந்தியாவையே உற்றுப்பார்க்கிறது. எனது ஒவ்வொரு நொடியும் நமது நாட்டு மக்களுக்கானது என்று தீர்மானித்துள்ளேன் என தெரிவித்துள்ளார். (4)

### மருத்துவ உலகில் சாதனை

# விபத்தில் துண்டான சிறுவனின் தலையை மீள பொருத்திய இஸ்ரேல் மருத்துவர்கள்



(இஸ்ரேல்)

கார் மோதியதால் கழுத்து அறுபட்ட 12 வயது இஸ்ரேலி சிறுவனுக்கு இஸ்ரேல் மருத்துவர்கள் மிகவும் அசாதாரணமான மற்றும் சிக்கலான அறுவை சிகிச்சையை செய்து தலையை மீண்டும் கழுத்தில் வெற்றிகரமாக பொருத்தியுள்ளனர்.

அந்த சிறுவன் தற்போது நலமாக உள்ளான். சுலைமான் ஹசன் எனப்படும் அந்த சிறுவன் சைக்கிள் ஓட்டிச் சென்றபோது அவன் மீது கார் மோதியது. இதில் அவனது தலை மற்றும் கழுத்தில் பலத்த காயம் ஏற்பட்டிருக்கிறது. தசை நார்கள் கிழிந்து முதுகுத் தண்டின் மேற்பகுதியிலிருந்து அவரது மண்டை ஓடு பிரிந்து விட்டது. கிட்டத்தட்ட அவனது கழுத்து துண்டான நிலைதான் இருந்தது.


விபத்து ஏற்பட்ட உடனேயே அச்சிறுவன் விமானத்தில் ஹடாசா மருத்துவ மையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர அறுவை சிகிச்சை பிரிவுக்கு அனுப்பப்பட்டான். மருத்துவர்கள் கடுமையாக முயற்சி செய்து மரணத்தின் விளிம்பில் இருந்து அந்த சிறுவனை காப்பாற்றி உள்ளனர். அவன் தலை கழுத்தின் அடிப்பகுதியில் இருந்து கிட்டத்தட்ட முற்றிலுமாக பிரிந்துவிட்டது என மருத்துவர்கள் தெரிவித்தனர். சிகிச்சையை மேற்பார்வையிட்ட எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணரான டாக்டர். ஓஹட் எய்னவ் கூறியதாவது: இது பல மணிநேரம் நடந்த ஒரு அறுவை சிகிச்சை. சேதமடைந்த பகுதியில் புது பிளேட்டுகள் பொருத்த வேண்டியிருந்தது.

எங்களின் திறமையாலும், புதுமையான தொழில்நுட்பத்தினாலும், எங்களால் சிறுவனை காப்பாற்ற முடிந்தது. மருத்துவர் குழு சிறுவனின் உயிரை காப்பாற்ற போராடியது.

நரம்பு, உணர்திறன் மற்றும் அசைவில் எந்தவித செயலிழப்புகளும் இல்லாமல் அந்த சிறுவன் செயற்படுவதும், இந்த அரிய அறுவை சிகிச்சைக்கு பிறகு எந்தவித உதவியின்றி அவனால் நடக்க முடிவதும், ஒரு சாதாரண விஷயம் அல்ல. மிகவும் அரிதான அறுவை சிகிச்சைகளை செய்வதற்கு மிகவும் நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்கள் தேவை. இது ஒரு பொதுவான அறுவை சிகிச்சையும் அல்ல. குறிப்பாக குழந்தைகள் மற்றும் பதின் வயதினருக்கு இதை போன்ற அறுவை சிகிச்சையை செய்வது கடினம். இதை செய்வதற்கு ஒரு தேர்ந்த அறிவும் அனுபவமும் உள்ள அறுவை சிகிச்சை நிபுணர் குழு தேவை. இவ்வாறு அவர் கூறினார். (4)

# நிலவின் சுற்றுப்பாதையை நோக்கி வெற்றிகரமாக செல்லும் சந்திரயான்-3

## விஞ்ஞானிகள் தீவிர கண்காணிப்பு



(டில்லி)

இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகமான இஸ்ரோ, நிலவை ஆய்வு செய்யும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இதில் கடந்த 2008ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட சந்திரயான்-1 விண்கலம் திட்டம் வெற்றி பெற்றது. 2019ஆம் ஆண்டு ஏவப்பட்ட சந்திரயான்-2 விண் கலம் வெற்றி பெறவில்லை. லேண்டர் நிலவில் வேகமாக தரையிறங்கியதால் தொடர்புகளை இழந்தது.

இதற்கிடையே நிலவின் தென் துருவத்தில் ஆய்வு செய்வதற்காக சந்திரயான்-3 விண்கலம், நேற்று முன்தினம் விண்ணில் வெற்றிகரமாக ஏவப்பட்டது. ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து எல்.வி. எம்.-3-எம்-4 ராக்கெட் மூலம் சந்திரயான்-3 விண்கலம் மதியம் 2.35 மணிக்கு ஏவப்பட்டது.

நிர்ணயிக்கப்பட்ட 179 கிலோ மீற்றர் தூரத்தை அடைந்ததும் சந்திரயான்-3 விண்கலத்தை இலக்கில் வெற்றிகரமாக கொண்டு சேர்த்தது. பூமியின் சுற்று வட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்ட விண்கலத்தை இஸ்ரோவின் தரை கட்டுப்பாட்டு நிலையம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

பின்னர் 3.84 இலட்சம் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள நிலவை நோக்கி பயணத்தை தொடங்கியது. சந்திரயான்-3 விண்கலம், நிலவின் சுற்று வட்டப் பாதையை நோக்கி வெற்றிகரமாக சென்று கொண்டிருக்கிறது.

அதனை இஸ்ரோ விஞ்ஞானிகள் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள்.

பூமியின் சுற்று வட்ட பாதையை சுற்றி வரும் சந்திரயான்-3 விண்கலம் வருகிற ஓகஸ்ட் 5 ஆம் திகதி நிலவின் சுற்றுப்பாதையை அடையும். புவியின் ஈர்ப்பு விசையும், நிலவின் ஈர்ப்பு விசையும் சமமாக இருக்கும் பகுதியில் புவி வட்டப் பாதையில் இருந்து விலகி நிலவின் வட்டப் பாதையில் சந்திரயான்-3 விண்கலம் புதிய பயணத்தை தொடங்கும். அப்போது நிலவின் ஈர்ப்பு விசையின் துணையுடன் அந்த சுற்று வட்டப் பாதையில் விண்கலம் பயணிக்கும். அதன்பின் நிலவின் சுற்றுப் பாதையை சுற்றி வந்து 23 ஆம் திகதி நிலவில் விண்கலம் தரையிறங்கும். (4)

# வரலாற்றில் அதிக வெப்பம் ஜூன் மாதத்தில் பதிவு

## நாசா தகவல்



(வோஷிங்டன்)

எல் நினோ தாக்கத்தால் உலகின் பெரும்பாலான பகுதிகளில் வெப்ப நிலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இந்த நிலையில் கடந்த ஜூன் மாதம் தான் வரலாற்றிலேயே உலகில் அதிக வெப்பம் பதிவான மாதம் என நாசா தெரிவித்துள்ளது.

ஜூன் 2023இற்கான உலகளாவிய சராசரி வெப்பநிலை 1951 முதல் 1980 ஜூன் வரையிலான சராசரியை விட 1.07 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருந்ததாக நாசா கூறுகிறது. இது, மனித நடவடிக்கைகளின் விளைவாக, முக்கியமாக கார்பன்டை ஒக்சைடு உமிழ்வுகளின் விளைவாக, அதிகரித்து வரும் உலகளாவிய வெப்ப நிலையின் ஒரு பகுதி என நாசா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு எறும்புகளைப் போல உபதேசிப்பவர் யாருமில்லை. ஆனால் எந்த எறும்புகளோ பேசுவதில்லை. ~ ஃபிராங்க்லின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தொல்லியல் என்ற பேரில் சிவநிந்தை நடக்கிறது

கர்ணன் போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கின்றான். தேவர்கள் எல்லோரும் திகைப்புற்று நிற்கின்றனர்.

சூரியப் புதல்வனின் ஆவி உடலினின்றும் பிரியாமல் அவன் செய்த ஈகைத் தர்மம் காத்து நிற்கிறது.

கர்ணன் உயிரோடு இருக்கும் கால் கௌரவர் சேனையை அழிக்க முடியாதென்ற உண்மையைத் தெரிந்த கண்ணபரமாத்மா, எப்படியாவது கர்ணனை மரணிக்கச் செய்ய வேண்டும் என முடிவெடுத்தான்.

இதற்காக வேதியர் வேடம் தரித்து போர்க்களத்தில் உயிருக்காகப் போராடும் கர்ணனிடம் செல்கின்றான்.

தன் திட்டத்தை நிறைவேற்ற "கர்ணா உன்னைக் காண்பதற்காக நெடுந்தூரத்தில் இருந்து தேடி வந்தேன். ஆனால் இந்நிலையில் உன்னைக் காணுகின்ற அபாக்கிய சாலியானேன்" என நடிக்கின்றான்.

கேட்ட வரம் கொடுக்கும் கர்ணனோ ஐயனே! இரந்தால் அனைவர்க்கும் ஈதல் செய்தேன். அது கொடுத்தேன். இது கொடுத்தேன். இப்போது அம்புபட்டு வீழ்ந்துற்றேன்.

உமக்கு ஈவதற்கு என்னிடம் ஏதுமில்லையே என்று வருந்தினான்.

நேரம் கனிந்தது. கர்ணா! நீ செய்த புண்ணியம் அனைத்தையும் எனக்குத் தந்தருளுக என்றான் மாயக் கண்ணன்.

அந்தோ! ஈட்டியை எடுத்து தன் உடலில் குத்தி உதிரத்தின் வழி தன் கோடி புண்ணியத்தையும் கண்ணனிடம் ஈந்தான் கர்ணன். அம்மட்டே! கர்ணனின் உயிர் பிரிந்தது.

இங்குதான் முரண்பாட்டு நிலை ஏற்படுகிறது.

ஐயா! கொடுப்பதால் புண்ணியம் கிடைக்குமெனில், கர்ணன் தான் செய்த புண்ணியத்தைக் கொடுத்தால், அது இரட்டிப்பான புண்ணியத்தையல்லவா கர்ணனுக்குக் கொடுத்திருக்க வேண்டும்.

அப்டியானால், அவனது உயிர் பிரிவது முறையோ என்ற தர்க்கம் எழுகிறது.

இத்தர்க்கம் குறித்து கருத்துரைத்த அறவோர்; நான் அது கொடுத்தேன். இது கொடுத்தேன் என்று கொடுத்ததை கூறியபோதே கர்ணன் செய்த புண்ணியம் செயலிழந்து போக, அவன் உயிர் பிரிந்தது என்றனர்.

ஆக, கொடைக்குக் கர்ணன் என்ற பெருமை படைத்தவனுக்கே இக்கதி என்றால், குருந்தூர்மலையில் பொங்கல் செய்வதைத் தடுத்த தேரர்கள், பொலிஸார் மற்றும் பேரினவாதிகள் எப்பாடுபடப் போகிறார்கள் என்பதுதான் நம் கேள்வி.

அந்தோ! சிவநிந்தனை குலநாசம் அன்றோ சிவனுக்கு நிவேதனமாக்கும் பொங்கலைத் தடுத்தல் மாபாவமன்றோ.

அதிலும் சப்பாத்துக் காலால் கற்பூர தீபத்தை உழக்கிய பொலிஸாரின் செயல் இத்தேசத்துக்கு ஈனமல்லவா.

அந்தோ! நாடு இன்னமும் மீளாது என்பதன் அறிகுறியோ ஈனர்களின் இவ் இழிச் செயல்.

ஆம், குருந்தூர்மலையில் நடந்த நாசகாரம் சாதரணமானதன்று. இது தெய்வ நிந்தை இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் மௌனம் சாதிப்பார்களேயாயின் அவர்களும் துன்பப்படுவர் என்பதால், குருந்தூர்மலையில் அந்தர்வ யாகம் நடந்தாக வேண்டும்.

# அரச வருமானத்தை அதிகரிக்க மக்கள் மீது வரிகளை சுமத்தோம்

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய

அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக மக்கள் மீது தொடர்ந்தும் வரி சுமைகளை சுமத்துவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. எனினும், இவ்வாண்டு மொத்த தேசிய வருமான இலக்கை அடைவதற்கு இன்னும் 100 பில்லியன் ரூபாய் வருமானத்தைப் பெற வேண்டியிருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக புதிய வருமான வழிகளை உருவாக்குவதற்கான மூலோபாயங்களை கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடக வியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,தேசிய உற்பத்திக்கு சமாந்தரமாக கடந்த ஆண்டு அரச வருமானம் சுமார் 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதன் காரணமாகவே பாரிய சவால்களை எதிர்கொள்ள நேரிட்டது. எனினும், இவ்வாண்டு அரச வருமானம் சற்று உயர்வடைந்துள்ளது.

இந்த ஆண்டு எமது இலக்கை அடைவதற்கு இன்னும் 100 பில்லியன் ரூபாய் வருமானத்தை ஈட்ட வேண்டியுள்ளது.

இதற்காக மக்கள் மீது மேலும் வரிச் சுமையை சுமத்த நாம் எதிர்பார்க்கவில்லை. மாறாக, வரிச் சுமைகளை படிப்படியாக குறைப்பது தொடர்பிலேயே அவதானம் செலுத்தியுள்ளோம். இதற்காக பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைத்து ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளோம்.

எதிர்வரும் புதன்கிழமை (19) ஜனாதிபதி செயலாளர் தலைமையில், துறைசார் நிபுணர்களை அழைத்து இது தொடர்பில் விசேட கலந்துரையாடலை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய வருமான வரி திணைக்களத்தினால் முக்கிய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பிலும் இந்த கலந்துரையாடலின் போது அவதானம் செலுத்தப்படும் என்றார். (ம-7)

## மொபைலில் வீடியோ கேம்
## யாழ். பல்கலைக்கழக மாணவன் உயிரிழப்பு

மொபைலில் வீடியோ கேமுக்கு அடிமையான யாழ். பல்கலைக்கழக மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த புஸ்பராஜா எழில்நாத் (வயது 22) என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

குறித்த மாணவன் கிளிநொச்சி அறிவியல் நகர் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் கல்வி கற்றவராவார்.

தாய்-தந்தையருக்கு ஒரே மகனான இவர் நேற்று வீட்டில் யாரும் இல்லாது தனிமையில் இருந்த போது தூக்கில் தொங்கி உயிரை மாய்த்துள்ளார்.

குறித்த சம்பவம் வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டில் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

குறித்த மாணவன் மொபைல் வீடியோ கேம் விளையாட்டிற்கு அடிமையான நிலையில் ஏற்பட்ட விரக்தியின் காரணமாகவே இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதையடுத்து சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்காக அறிக்கையிட்டார்.

யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மொபைல் வீடியோ கேம் விளையாட்டு ஏற்படுத்திய மன விரக்தியால் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் தனது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ம-7)

## தமிழகத்தைச் சேர்ந்தவர் மட்டக்களப்பில் கைது

இந்தியாவில் இருந்து சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து விசா இன்றி 2 வருடங்களாக வசித்து வந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவரை மட்டக்களப்பு நகரில் சந்தேகத்திற்கு இடமாக நடமாடிய நிலையில் நேற்று கைது செய்துள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழ்நாடு சின்பள்ளி கிராமம் கம்பள்ளி பேஸ்ட் கிருஸ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த செல்லப்பன் செல்வதுரை என்ற நபர் கடந்த 2021ம் ஆண்டு சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்த நிலையில் யாழ்ப்பாணம் கைலாச பிள்ளையர் கோவில் பகுதியில் தங்கிருந்துள்ளார்.

இவர் சம்பவதினமான நேற்று சனிக்கிழமை மட்டக்களப்பு நகர்பகுதியில் மட்டக்களப்பைச் சேர்ந்த நண்பர் ஒருவருடன் சந்தேகத்திற்கு இடமாக நடமாடிய நிலையில் இருவரையும் கைது செய்து விசாரணையின் போது விசா இன்றி கடந்த 2 வருடங்களாக தங்கி இருப்பது தெரியவந்துள்ளது.

இதில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## ரயில் மோதியதில் பெண் உயிரிழப்பு

மருதானையில் இருந்து தெற்கு களுத்துறை நோக்கி பயணித்த ரயிலில் மோதி 60 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாணந்துறை மற்றும் எகொடஉயன ரயில் நிலையங்களுக்கு இடையில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

ரயில் பாதையை கவனக் குறைவாக கடக்கும் போதே குறித்த பெண் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளதாக பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## காணாமல்போனவர் சடலமாக மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பகுதியில் கடந்த 10 நாட்களாக காணாமல் போயிருந்த ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு - வாவிக்கரையில் உருகுலைந்த நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 05ஆம் திகதி முதல் அவர் காணாமல் போயிருந்ததாக அவரது உறவினர்கள் முறைப்பாடளித்திருந்தனர்.

உயிரிழந்தவர் நீண்டகாலமாக நோய் நிலைமைக்கு உள்ளாகியிருந்த நிலையில் நோய் குணமாகாததால் அவர் வீட்டை விட்டு வெளியேறியதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-7)

## செவிப்புலனற்றவர்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரம்

செவிப்புலனற்றவர்களுக்கான சாரதி அனுமதி பத்திரம் வழங்கி வைக்கும் முதலாவது வேலைத்திட்டம் கம்பஹா மாவட்டத்தில், ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கம்பஹா மாவட்டத்தில் உள்ள 40 பேருக்கு நேற்று சாரதி அனுமதி பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண தெரிவித்துள்ளார்.

இதற்காக 76 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாகவும், அதில் தெரிவு செய்யப்பட்ட 40 பேருக்கே சாரதி அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டதாக வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், செவிப்புலனற்றவர்களுக்கான வாகன அனுமதிப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டம், எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து நாடு முழுவதும், விஸ்தரிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் விடுதலை முன்னணி யாழில் நேற்று போராட்டம்



"பிரிப்பதற்கு இடங்கொடோம் ஒன்றாய் நாம் பறந்திடுவோம்" எனும் தொனிப்பொருளில் கவனயீர்ப்பு போராட்டமொன்று யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) இளைஞர் அமைப்பான சோசலிச இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் துண்டுப் பிரசுர விநியோகமும் கவனயீர்ப்பு போராட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன்போது சிங்கள தமிழ் முஸ்லீம் நல்லிணக்கம் நீடுழி வாழ்க, இனவாத அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம், தேசிய ஒற்றுமைக்காக போராடுவோம், இனவாதத்தில் சிக்காமலிருப்போம், மீண்டும் ஒருமுறை வேண்டாம் ஒன்றாய் நாம் பறந்திடுவோம், தேசிய நல்லிணக்கத்தை மீண்டும் பிரிப்பதற்கு இடமளிக்க வேண்டாம், தோல்வியால் ஆட்சியாளர்களின் ஆயுதம் இனவாதம் என்பன உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு கோசங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-33-104)

# மேலும் எட்டு பேர் தமிழகத்தில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து மேலும் எட்டு பேர் அகதிகளாக நேற்று சனிக்கிழமை அதிகாலை தனுஷ்கோடியில் தஞ்சமடைந்துள்ளதாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக ஈழத்தமிழர்கள் வாழ வழி இன்றி தமிழகத்தில் தஞ்சம் அடைந்து வருவது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தமிழக ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில் இராமேஸ்வரம் அடுத்த தனுஷ்கோடி கடற்கரை பகுதியில் இலங்கையில் இருந்து படகு மூலம் எட்டு பேர் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளதாக மரைன் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸார் எட்டு பேரையும் மீட்டுள்ளனர்.

அவர்களிடம் விசாரணை மேற்கொண்டதன் பின்னர் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்படவுள்ளனர் என தமிழக செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (4-60)

# நூலகவியலாளர் செல்வராஜாவின் இரு நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

புலம் பெயர்ந்து வாழுகின்ற நூலகவியல்ாளரான என். செல்வராஜாவின் யாழ்ப்பாணம் பொது சன நூலகம் தொடர்பாக எழுதப்பட்ட யாழ்ப்பாணம் பொது நூலகம், "Rising from the Ashes ஆகிய இரு நூல்களின் வெளியீட்டுவிழா யாழ்ப்பாணம் பொதுசன நூலக ஏற்பாட்டில் நாளை மறுதினம் 18 ஆம் திகதி மாலை 3 மணிக்கு யாழ். பொது சன நூலக கேட்போர் கூடத்தில் யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெறும். (4)



மறைந்த பிரபல எழுத்தாளர் குப்பிழான் ஐ.சண்முகனின் ஓர் இலக்கியக்காரனின் வாழ்வனுபவங்கள் மற்றும் அவரது பாரியார் ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி.புனிதவதி சண்முகனின் ஆனந்தக் கூத்து நாட்டிய நாடகத் தொகுப்பு ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள தனியார் மண்டபத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர். எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெற்றது. (படம்-கஜிந்தன்)

# கறுப்பு ஜூலையை நினைவு கூர்ந்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)



கறுப்பு ஜூலை கலவரத்தை நினைவு கூர்ந்தும் ஒற்றுமையை வலியுறுத்தியும் வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சோசலிச இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் மூவின மக்களின் பங்கு பற்றுதலுடன் குறித்த ஆர்ப்பாட்டமானது வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், "இனியும் கலவரம் வேண்டாம், பிரிவினைகள் வேண்டாம், சமூக ஒற்றுமையை குலைக்காதே, ஆட்சியாளர்களே இனவாதத்தை தூண்டாதே, யாழ்.நூலகத்தை எரித்தது இனவாதமே, நாடு பூராகவும் ஜூலை கலவரத்தை திட்டமிட்டு நடத்தியது ஆட்சியாளர்களே" என எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், கோசங்களையும் எழுப்பினர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன என்பனவே இந்த நாட்டின் இன நல்லுறவு சீர் குலைத்து கலவரங்கள் ஏற்படக் காரணம் எனவும், அவ்வாறான ஆட்சியாளர்களை விரட்டியடிக்க வேண்டும் எனவும் கருத்து தெரிவித்தனர். (4-250)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 320 |
| உருளைக்கிழங்கு | 220 | 240 | 240 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 600 |
| தக்காளி | 350 | 500 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 220 | 300 |
| கோவா | 300 | 300 | 300 |
| கரட் | 400 | 500 | 600 |
| பூசணி | 120 | 100 | 150 |
| புடோல் | 150 | 160 | 200 |
| வாழைக்காய் | 160 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 420 | 350 | 550 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 160 |
| பாகற்காய் | 450 | 400 | 500 |
| வெண்டக்காய் | 250 | 180 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 250 |
| பயற்றங்காய் | 450 | 300 | 250 |
| லீக்ஸ் | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 400 | 380 | 350 |
| கறிமிளகாய் | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 500 |
| போஞ்சி | 550 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 300 |
| கீரை – 1 பிடி | 80 | 80 | 100 |
| தேசிக்காய் | 250 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 300 | 350 | 500 |
| முள்ளங்கி | 160 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 50 | 60 |
| ஈரப்பலா | 160 | — | 150 |

# இலங்கையில் யானை மனித மோதல்களில் உயிரிழப்பவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் யானை - மனித மோதலினால் ஏற்படும் இறப்பு விகிதம் ஒவ்வொரு ஆண்டும் பாரிய அளவில் அதிகரித்து வருகிறது. கடந்த வருடம் யானைகளினால் 146 கிராம மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இதனை, அநுராதபுரத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, 2021 ஆம் ஆண்டில் குறைந்தது 375 யானைகளும், 2022 இல் 439 யானைகளும் கொல்லப்பட்டுள்ளன. மின்சார பொறிகள், பட்டாசுகள் வெடிக்கும் கருவி, கூரான பலகைகள் மற்றும் விஷம் வைத்தல் ஆகியவற்றினால் காட்டு யானைகள் கொல்லப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், பல யானைகள் புகையிரதத்தில் சிக்கியும், பாதுகாப்பற்ற கிணறுகளில் வீழ்ந்தும் உயிரிழப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

2016 ககுப் பிறகு பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான செலவு மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் பெருமளவில் அதிகரித்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அதேவேளை, மின்சார வேலிகள் அமைத்தல், யானைகளை விரட்டும் வகையில் அதிரடி சோதனை நடத்துதல், பட்டாசுகளை வழங்குதல் போன்றவற்றுக்கு வருடத்துக்கு அரசாங்க திணைக்களம் சுமார் 200 மில்லியன் பணம் செலவழிக்கப்படுவதாக தெரிவித்துள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழி...

கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கோழியிறைச்சி ஒரு கிலோ கிராமின் விலை ஆயிரத்து 450 ரூபாய் வரையில் குறைவடைந்துள்ளதாக, அகில இலங்கை கோழியிறைச்சி வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

விலங்குத் தீவனங்களின் விலைகள் குறைவடைந்துள்ளமையால் கோழியிறைச்சியின் விலையும் குறைக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.(ம-7)

## பளையில்...

முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய எம்பெருமாள் குமரவேல் என்பவரே உயிரிழந்துள்ளார்

யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த மோட்டார்சைக்கிள் மீது அதே திசையில் பயணித்த ஹயஸ் வான் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஸ்தலத்தில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,100,316)

## ஜனாதிபதி...

கொண்டு வரப்பட்டதில் இருந்து இன மத ரீதியான பேதங்களை ஏற்படுத்தி முன்னைய அரசியல்வாதிகள் எங்களை பிளவுபட வைத்தனர்.

பேதம் இல்லாததால்தான் இன்று பல நாடுகள் அபிவிருத்தி அடைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

தற்போதைய ஜனாதிபதி இந்த நாட்டை கட்டியெழுப்ப நினைத்தாலும் வேறு அரசியல் காரணங்களுக்காக சிலர் விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

இனியும் இன, மத ரீதியாக பிரிந்து நிற்காமல் அனைவரும் இணைந்து நாட்டை கட்டியெழுப்ப முன்வரவேண்டுமெனவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அதேநேரம், வடக்கிலுள்ள இளைஞர் யுவதிகள் இடைத்தரகர்களால் அதிகளவில் ஏமாற்றப்பட்டுள்ளனர் எனவும் இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் ஒரு தொழிற்பயிற்சி நிலையமொன்று நிறுவப்படும் என்றும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார். (ம-7,33,104)

## பதவியேற்பை...

விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி பதவியேற்பு வைபவத்தை பல தரப்பினர் நடத்த கோரியிருந்தாலும் ஜனாதிபதி அதனை நடத்தவில்லை என தகவல்கள் குறிப்பிடுகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று எதிர்வரும் 20ஆம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகிறது.

கடந்த வருடம் ஜூலை மாதம் 20ம் திகதி பாராளுமன்றில் 134 வாக்குகளை பெற்று ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நகுலேஸ்வரக்...

கீரிமலை பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக இருந்தபோது கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தைப் பாதுகாப்பதில் குருக்கள் அவர்கள் அரும்பாடுபட்டார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யாழ்ப்பாணம் விஜயம் செய்த போது கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயம் சென்று நகுலேஸ்வரக் குருக்களிடம் ஆசி பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-7)

## குருந்தூர்மலை...

லும், பொலிஸார் மற்றும் சிங்கள பிக்குகள் இணைந்து அதனைத் தடுத்திருப்பதன் மூலம் தமிழ்மக்களின் மத வழிபாட்டு உரிமை பறிக்கப்பட்டுள்ளது" என்று சுட்டிக்காட்டினார்.

அத்தோடு, அப்பகுதிக்கு வருகை தந்திருந்த பௌத்த பிக்குகள் மற்றும் சிங்களவர்களைக் காட்டிலும் அங்கு பிரசன்னமாகியிருந்த பொலிஸாரே மிகமோசமாக நடந்துகொண்டதாகவும், தம்மை மிலேச்சத்தனமான முறையில் தாக்க முற்பட்டதாகவும், அங்கிருந்த பெண்களைத் தகாதமுறையில் வெளியேற்றியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, குருந்தூர்மலையில் பொங்கல் பொங்குவதற்கு நீதிமன்றம் அனுமதியளித்திருந்த போதிலும், அங்குசென்ற தமிழ்மக்கள் தடுத்து நிறுத்தப்பட்டு, அவர்களின் வழிபாட்டு நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டமையைக் கடுமையாகக் கண்டிப்பதாகக் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தெரிவித்தார்.

"ஏற்கெனவே குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசப்பட்டிருக்கும் அதேவேளை, இவ்விவகாரத்தில் தாம் தவறான முறையில் செயற்பட்டிருப்பதைத் தொல்லியல் திணைக்கள அதிகாரிகளும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறான தொரு பின்னணியில் நீதிமன்றத்தின் அனுமதியுடன் அப்பகுதிக்கு வழிபடச் சென்ற தமிழ்மக்களுக்கு எதிராக பொலிஸார் மிகமோசமாக நடந்துகொண்டிருப்பது இன, மதவாதத்தின் உச்சக் கட்டமேயாகும்" என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டினார். (ம-7)

## 13ஐ...

விட வேண்டும்என யாழ். பல்கலைக்கழக வேந்தரும் வரலாற்று துறைப் பேராசிரியருமான சிவசுப்பிரமணியம் பத்மநாதன் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று சனிக்கிழமை தந்தை செல்வா அறக்கட்டளை நிலையத்தில் இடம்பெற்ற 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் இந்தியாவின் வகிபாகம் பற்றிய கலந்துரையாடல் நிகழ்வைத்தலைமை தாங்கி கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிலர் 13 தமிழ் மக்களுக்கு தீர்வு இல்லை என கூறுகிறார்கள். நானும் 13ஐ முழுமையான தீர்வாக ஏற்றுக் கொள்ளாத நிலையில் இந்தியாவும்இதை இறுதித் தீர்வாகக் கூறவில்லை.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கும் பதின்மூன்றுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதால் அதனை ஆரம்ப புள்ளியாக முன்னெடுக்க விரும்பாதவர்கள் அதனை முன்னெடுத்துச் செல்வோருக்கு தடையாக இருக்கக் கூடாது.

தமிழ் கட்சிகள் ஒற்றுமையுடன் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கு ஓரணியில் நின்று இந்தியாவுக்கு தமது நிலைப்பாட்டை எடுத்துக்கூற வேண்டும்.

ஆகவே தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு ஆரம்பப் புள்ளியாக இருக்கின்ற பதின்மூன்றாவது திருத்தத்தை உதறித் தள்ளினால் எல்லாமே சூனியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)


தன நிதானய
திகதி - 2023.07.15
சீட்டிழுப்பு இலக்கம் - 1206
R 02 71 72 80 R
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2023.07.15
சீட்டிழுப்பு இலக்கம் 3418
J 15 22 25 27
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 15/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1524
P 23 03 07 11 40

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.15
சீட்டிழுப்பு இலக்கம் 485
மீனம் 24 40 41 53 மீனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/07/15
சீட்டிழுப்பு இலக்கம் 5176
P 8 9 7 2 4 0
தேசிய லொத்தர் சபை

லக்கி 7
திகதி 2023.07.15
சீட்டிழுப்பு இலக்கம் 0002
L7 இலக்கம் 2 6
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 2 3 7 2 4 3

யாழ்.நகரில் பரிசு மழை
தேசிய லொத்தர் சபை லக்கி செவின் (14.07.2023) முதலாவது விசேட சீட்டிழுப்பின் மூலம் யாழ்.நகரில் நேற்றைய தினம் இரண்டு இலட்சங்கள் 2 உம், ஒரு லட்சங்கள் 5 உம், தங்க நாணயம் 1 உம் 20,000/= ரூபா பணப் பரிசில் ஏராளமும் ஒரே தடவையில் யாழ். முகவர் கனகலிங்கம் (சிவகரன்) ஊடாக வெற்றி கொள்ளப்பட்டுள்ளதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.
யாழ்.நகர் முகவர் - S.கனகலிங்கம் (16307)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2150 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.07.15 தினம் சனிக்கிழமை
03 23 42 73 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,370,788.40
"இரண்டாம் வரம்" 13 55 62 66 F
DLB

சனிதா
திகதி 2023.07.15 வெற்றி வாரம் 4311
04 33 67 72 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,125,272.00
"இரண்டாம் வரம்" 16 22 49 55 Z
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3862 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.07.15 தினம் சனிக்கிழமை
10 24 42 43 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,423,548/-
"இரண்டாம் வரம்" 02 03 13 38
DLB

கப்றுக
திகதி 15.07.2023 வெற்றி வாரம் 1326 வர்ணம் சிவப்பு
M 07 11 12 16 49
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 417,125,104.20
"இரண்டாம் வரம்" 17 42 43 64 I
DLB தொலை பேசி 011-2 333 546-47 Web : www.dlb.lk

சம்பத் வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 611 திகதி 2023-07-15 வர்ணம் ஆரஞ்சு நிறம்
T 08 47 49 01
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 21,854,208.00
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 1976
வர்ணம் : மஞ்சல்
சீட்டிழுப்பு திகதி : 2023.07.15
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,674,646/-
11 15 58 65 U
"இரண்டாம் வரம்" 07 38 41 52 Y
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2023 – ஆகஸ்ட் மாதத்திற்கான பட்டப்படிப்புகளின் புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**MBA - Master of Business Administration**

கால அளவு : 01 வருடம்

நுழைவுத் தகைமை : ஏதேனும் Bachelor Degree அல்லது முகாமைத்துவ துறையில் 05 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

**BBA - Bachelor of Business Administration** | **B.A in English** | **B.Eng in Civil Engineering**

கால அளவு : Final year Direct Entry

நுழைவுத் தகைமை : HND / Advanced Diploma அல்லது Diploma உடன் சம்பந்தப்பட்ட துறையில் 2 வருடங்களுக்கு மேற்பட்ட தொழில் அனுபவம்.

நேரடி மற்றும் online வகுப்புகள் (யூலை மாதத்திற்குள் பதிவு செய்பவர்களுக்கு விசேட கட்டண கழிவு உண்டு.)

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்ட கற்கைநெறிகள்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கும், மேற்கத்திய நாடுகளுக்கு இடம் பெயர்வதற்கான (migration) ஏற்ற வகையில் Wes அங்கீகாரம்.
- அரச பல்கலைக்கழக மற்றும் அரச உயர்கல்வி நிறுவன விரிவுவரையாளர்களால் விரிவுரைகள் நிகழ்த்தப்படுகிறது.

(16294)

No. 925, K.K.S Road, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 021 468 0964, 077 543 8086



## வீடு வாடகைக்கு தேவை

நல்லூர் அருகாமையில் 3 அறைகள் தளபாட வசதியுடன் வீடு வாடகைக்கு தேவை.
தரகர் தேவையில்லை. (16309)

**075 440 5362**



## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி சந்தையில் இருந்து தனங்களப்பு வீதியில் 100 மீற்றர் தூரத்தில் பிரதான வீதியுடன் 150 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு (16193)

**077 348 1379, 077 113 1452**



## வேலையாள் தேவை

யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட வியாபார நிலையமொன்றில் கணக்காளர் வேலைக்கு 40 வயதிலிருந்து 60 வயதிற்குட்பட்ட ஆண் தேவை.
(யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.) (16308)

**076 057 0354**



## யப்பான் சைக்கிள் விற்பனைக்கு

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு கழுவிப் பூட்டிய யப்பான் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
யப்பான் சைக்கிள் விற்பனை நிலையம்
பலாலி வீதி, கோண்டாவில் சந்தி, யாழ்ப்பாணம்.
(இராஜேஸ்வரி மண்டபத்திற்கு அருகாமை) (C-6923)

**077 480 4160**



## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு சமையல் செய்பவர், உதவியாளர் தேவை.
தங்குமிடம், உணவு இலவசம்
தொடர்புகளுக்கு (16302)

**077 629 0894**



## காணி விற்பனைக்கு

நந்தாவில் அம்மன் கோவிலடி கோண்டாவில் காணி விற்பனைக்குண்டு. (16303)

**077 773 0567**



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
- ONLINE APPLICATIONS
- VISA APPOINTMENTS
- PASSPORT APPLICATION
- POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்




(C-6924)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது -30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com

(C-6924)



## காணி விற்பனைக்கு

நாவற்குழி 110 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு (16303)

**077 773 0567**



## காணி விற்பனைக்கு

இராச பாதை வீதியில் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு (16303)

**077 773 0567**



## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/= (16033)

T.P: 077 544 8503



## A/L Online Classes

**English Medium**
- Biology
- Chemistry

(16202)

077 807 5566



## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg சீனி | - 229/= | (max 2Kg) |
| 1 Kg றவை | - 289/= | |
| 1 Kg கோதுமை மா | - 185/= | (max 5Kg) |
| 1 Kg prima கோதுமை மா | - 206/= | |
| 1 Kg அரிசி மா | - 165/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 148/= | |
| 1 Kg பொன்னி அரிசி No1 | - 225/= | |
| 1 Kg கீரி சம்பா | - 260/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 268/= | (max 3Kg) |
| 1 Kg மல்லி No1 | - 450/= | |
| 10 Kg விஜிதா நாடு அரிசி | - 1710/= | |
| 400 g Nestomalt box | - 799/= | |

(16306)

தரமான பொருட்களை சிறந்த விலையில் பெற்றுக்கொள்ளுங்கள் குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

**Happy Supermarket** பலாலி வீதி,
**077 780 8030** உரும்பிராய் சந்தி.


# மரண அறிவித்தல்



## சின்னத்துரை யோகராசா (வவி)

V.C.C அருகாமை, மாவிட்டபுரம் தெற்கு, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை யோகராசா (வவி) அவர்கள் 14.07.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான சின்னத்துரை - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் அமரர்களான கந்தையா - இளையாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் ரஞ்சினிதேவியின் பாசமிகு கணவரும் சங்கீத், பிரியங்கா, பிரியதர்சன், சஞ்சதன்(தபாலக உத்தியோகத்தர் - தபாலகம், தெல்லிப்பழை), பிரியந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் லெச்சனாவின் மாமனாரும் யோகமலர், அரியமலர், தியாகராசா, ரஞ்சிதமலர், கணேசராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் அமரர்களான திருநாவுக்கரசு பத்மாவதி, நாகேஸ்வரன், ஸ்ரீகாந்தரூபன், அமரர் அருளம்பலம், அமரர் வேலுப்பிள்ளை, சண்முகலிங்கம், கிரிஜா, ராசமலர் ஆகியோரின் மைத்துனரும் பிரகர்சா, பிரணிசா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை 16.07.2023 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் தெல்லிப்பழை கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்
V.C.C அருகாமை, மாவிட்டபுரம் தெற்கு,
தெல்லிப்பழை. (16304)


## Apex Travels

எம்மிடம் சகல நாடுகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்களை (flight Tickets) குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**யாழ்ப்பாணம் - சென்னை**

தினசரி விமான சேவைகள் இருவழிப் பயணச் சீட்டுக்கள் (Return Tickets)

**67,000/= இலிருந்து...**

20Kg + 5Kg பயணப் பொதியுடன்......
முன்பதிவுகளிற்கு Apex Travels

**077 759 7598, 076 333 3644**

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

கனடா வீசா ஆலோசனைகளிற்கு மற்றும் விண்ணப்ப படிவங்கள் நிரப்புதல் போன்ற சேவைகளிற்கு.. (நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்)

APEX TRAVELS - யாழ்ப்பாணம் 077 759 7598


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.